பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 232

வியாழக்கிழமை
17 ஜூலை 2025

ஆடி 01 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056


## முன்னாள் எம்.பி.க்கு மரண தண்டனை

விரிவு பக்:- 03

யாழ்ப்பாணம் மாநகரசபையின்

# திண்மக் கழிவகற்றலில் பெரும் ஊழல்மோசடி!

### நேற்றைய அமர்வில் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 17

யாழ்ப்பாணம் மாநகரசபையின் திண்மக் கழிவகற்றல் செயற்பாட்டில் பெரும் ஊழல் மோசடிகள் காணப்படுகின்றன என்று யாழ்ப்பாணம் மாநகர சபையின் நேற்றைய அமர்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

11

அரசை வீழ்த்தக்கூடிய

## வலுவான எதிரணி நாட்டில் இல்லை!



கொழும்பு, ஜூலை 17

பல உதிரிகளாகப் பிரிந்து எதிரணிகள் வங்குரோத்து அடைந்துவிட்டன. வலுவான எதிரணியென தற்போது ஒன்றும் இல்லை - என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

11



முதல்வரின் விடயத்தில்

## மூக்கை நுழைத்த துணைமுதல்வர்!

### நேற்றைய அமர்வில் கடும் நேரவிரயம்

யாழ்ப்பாணம், ஜூலை 17

யாழ்ப்பாணம் மாநகரசபையின் அமர்வின்போது, முதல்வர் இருக்கத்தக்கதாக, முதல்வர் பதில்

11

யாழ். மாநகரசபை அமர்வில்

## மிகமுக்கியமான விவாதங்களில் சபையில் உறுப்பினர்கள் இல்லை

யாழ்ப்பாணம், ஜூலை 17

யாழ்ப்பாணம் மாநகர சபையின் நேற்றைய அமர்வில், மிகவும் முக்கியமான கலந்துரையாடல்கள் இடம்பெற்றபோது, உறுப்பினர்கள் பெருமளவானோர் சபையில் இருக்கவில்லை.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் அமர்வு நேற்றுக்காலை ஆரம்பித்தது. நிகழ்ச்சிநிரலில் உள்ளடக்

11

யாழ்ப்பாணம் மாநகரசபையால்

## கல்லுண்டாய்வெளியில் மருத்துவக்கழிவுகள்

### முழுமையாக விசாரிக்கப்படவேண்டும் என்று மாநகர அமர்வில் உறுப்பினர்கள் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 17

யாழ்ப்பாணம் மாநகரசபையின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள அரச, தனியார் மருத்துவமனைகளின் மருத்துவக் கழிவுகள் யாழ்ப்பாணம் கல்லுண்டாய்வெளிப் பகுதியில் கொட்டப்படுகின்றன. இது பேரபத்தானது

11

யாழ். மாநகரசபை அமர்வு

## 'பேஸ்புக்கில்' நேரலைவிட்ட உறுப்பினருக்குக் கண்டனம்



யாழ்ப்பாணம், ஜூலை 17

யாழ்ப்பாணம் மாநகர சபை அமர்வை பேஸ்புக் ஊடாக நேரலையில் ஒளிபரப்பிய அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸைச் சேர்ந்த மாநகர சபை உறுப்பினருக்கு மாநகர முதல்வரால் கடும் எச்சரிக்கை விடுக்

11

## ரயிலுடன் மோதுண்டு குடும்பத்தலைவர் பலி

விரிவு பக்கம்:- 04

வரிகளைக் குறைத்து

## ஓகஸ்ட் முதலாம் திகதிக்குள் அமெரிக்காவுடன் ஒப்பந்தம்!

கொழும்பு, ஜூலை 17

இலங்கை மீது அமெரிக்கா விதித்துள்ள வரிகளைக் குறைத்து, எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதிக்குள் புதிய வர்த்தக ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் என்று இலங்கையின் வெளிவிவகார

04

## நடந்து முடிந்ததே வரலாறு தணிக்கைக்கு இடமில்லை!

### தேசியத் தலைவரின் நிலை தொடர்பில் முன்னாள் போராளி பஷீர் காக்கா அறிக்கை

யாழ்., ஜூலை 17

எமது புனிதமான விடுதலை இயக்கத்தின் தலைவரை தமிழினம் இழந்துவிட்டது என்ற செய்தியை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும், உணர்ந்துகொள்ளவும் வேண்டும் - இவ்வாறு முன்னாள் மூத்த போராளி பஷீர் காக்கா (மு.மனோகர்) தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவரால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் உள்ள

11

முச்சந்தி முரளி

'இப்பிடி கதைச்சுக் கதைச்சே காலத்தை வீணாக்கிற ஆக்கள் தானே நாங்கள்'

ஜூலை 24, 25ஆம் திகதிகளில்

## அரசியற்கைதிகளின் விடுதலைக்காக கிட்டுப் பூங்காவில் போராட்டம்!

### குரலற்றவர்களின் குரல் அமைப்பு அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 17

அரசியற்கைதிகளின் விடுதலையை வலியுறுத்தியும், சிறைச்சாலைகளில் கொல்லப்பட்ட அரசியற்கைதிகளுக்கு நீதிகோரியும் ஜூலை 24, 25ஆம் திகதிகளில் குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் கிட்டுப் பூங்கா

11

## கூமாங்குளம் வன்முறை; இருவர் விளக்கமறியலில்

வவுனியா, ஜூலை 17

வவுனியா - கூமாங்குளம் பகுதியில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவம் தொடர்பில், இருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு, நீதிமன்ற

04



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாணசபைத் தேர்தலை உடனடியாக நடத்துங்கள்

## சமூக நீதிக்கான தேசிய இயக்கம் வலியுறுத்து

**கொழும்பு, ஜூலை 17**

**மாகாணசபைத் தேர்தல் முறைமையில் நிலவும் சிக்கல் தொடர்பாக அவதானம் செலுத்தவேண்டியது அவசியமானது. ஆனால் தேர்தலைக் காலம் தாழ்த்துவதற்கு அது காரணமாகப் பயன்படுத்தப்படக்கூடாது என்று சமூக நீதிக்கான தேசிய இயக்கம் வலியுறுத்தியுள்ளது.**

முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையிலான சமூக நீதிக்கான தேசிய இயக்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:- அரச இயந்திரத்தின்கீழ் மக்கள் பிரதிநிதிகளைக்கொண்ட கட்டமைப்புகளில் மாகாணசபைகள் தவிர்ந்த ஏனைய சகல கட்டமைப்புகளும் தற்போது இயங்கு நிலையில் உள்ள பின்னணியில், மாகாணசபைகளைத் தொடர்ந்தும் நிறைவேற்றதிகார நிர்வாகத்தின்கீழ் வைத்து, மக்கள் பிரதிநிதிகள் தெரிவை முடக்குவது என்பது அரசமைப்புக்கு முரணானது மாத்திரமன்றி, மக்களின் ஆணை வழங்கல் அதிகாரத்தையும் பறிப்பதாகவே அமையும். ஜனநாயகத்தை நேசிக்கும் அனைவரும் இவ்விடயம் தொடர்பில் விசேட அவதானம் செலுத்தவேண்டும். தேவையேற்படின், ஜனாதிபதி விசேட ஆணைக்குழுவொன்றை நியமித்து பரிந்துரைகளைப் பெற்றுக்கொள்ளலாம். எந்தவொரு விடயத்தையும் உரிய காலப்பகுதியில் நடத்தப்படவேண்டிய மாகாணசபைத் தேர்தல்களைக் காலந்தாழ்த்துவதற்கான காரணமாகப் பயன்படுத்தக்கூடாது - என்றுள்ளது. (ஏ-இ)

சுபிரி தன சம்பத
திகதி: 16.07.2025
தினம்: புதன்கிழமை
வெற்றி வாரம்: 0600
ஆங்கில எழுத்து: V
வெற்றி இலக்கம்: 3 4 6 3 2 5

Super Ball
திகதி: 16.07.2025
தினம்: புதன்கிழமை
சீட்டிழுப்பு வாரம்: 2866
ஆங்கில எழுத்து: C
வெற்றி இலக்கம்: 23 35 46 49

சனிதா
திகதி: 16.07.2025
தினம்: புதன்கிழமை
ஆங்கில எழுத்து: P
வெற்றி இலக்கம்: 02 39 46 70
வெற்றி வாரம்: 5027

லக்ன ராசி
திகதி: 16.07.2025
தினம்: புதன்கிழமை
கடகம்
வெற்றி இலக்கம்: 33 40 50 54
சீட்டிழுப்பு வாரம்: 4578

KAPRUKA
திகதி: 16.07.2025
தினம்: புதன்கிழமை
ஆங்கில எழுத்து: A
சுப்பர் இலக்கம்: 33
வெற்றி இலக்கம்: 22 35 49 65
வெற்றி வாரம்: 2042

அத கோடிபதி
திகதி: 16.07.2025
தினம்: புதன்கிழமை
ஆங்கில எழுத்து: Q
வெற்றி இலக்கம்: 21 41 62 73
வெற்றி வாரம்: 2692

JAYODA
திகதி: 16.07.2025
தினம்: புதன்கிழமை
ஆங்கில எழுத்து: E
வெற்றி இலக்கம்: 05 18 40 57
வெற்றி வாரம்: 2144

## வவுனியா மாவட்ட பண்பாட்டுப் பெருவிழா

வவுனியா, ஜூலை 17

வவுனியாப் பிரதேச செயலகம் மற்றும் பிரதேச கலாசாரப் பேரவை ஆகியவற்றின் இணை ஏற்பாட்டில் பிரதேச பண்பாட்டு விழா நாளை வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது.

பிரதேச செயலாளர் இ.பிரதாபன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வின் ஆரம்ப நிகழ்வாக பண்பாட்டு ஊர்திப்பவனி பிரதேச செயலகம் முன்பாக காலை 9 மணிக்கும் அரங்க நிகழ்வுகள் பி.ப 1 மணிக்கும் வவுனியா மாநகரசபை கலாச்சார மண்டபத்தில் நடைபெறும். இந்த பண்பாட்டு பவனி ஊர்தியானது பிரதேச செயலக வரலாற்றில் முதன் முறையான அனைத்து கிராம அலுவலர்கள் பிரிவுகளையும் உள்ளடக்கி இடம்பெறவுள்ளது.

அரங்க நிகழ்வில் வவுனியாவின் குரல் தெரிவில் தெரிவுசெய்யப்பட்ட 18 வயதுக்கு உட்பட்டவர்கள் மற்றும் 18வயதுக்கு மேற்பட்டவர்கள் பிரிவில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களுக்கான "வவுனியாவின் குரல்" விருது வழங்கி வைக்கப்படவுள்ளது.

அத்துடன் 2025ஆம் ஆண்டுக்கானகான "கலாநேத்ரா" விருது வழங்கிவைக்கப்படவுள்ளது. அந்த வகையில் பா.கதீஷன், நா.செந்தூர்ச்செல்வன், அ.மெலிஸ்ரன், ச.அனோஜன், செ. சண்முகரத்தினம், சு.சிவயோகராஜா, சி.நாகராசா, வ. கந்தப்பு, சே.சந்திரகாந்தன், மா. தர்மகுலசிங்கம் ஆகிய கலைஞர்கள் விருதைப் பெறவுள்ளனர். (ச-25,110,18)

## தற்போதைய கைதுகள் முறையாகவே நடக்கின்றன

### லக்ஷ்மன் நிபுணாராய்ச்சி தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 17

சரத் பொன்சேகாவை இழுத்துக்கொண்டுபோய் சிறையில் தள்ளியது போன்று நாம் எவரையும் இழுத்துக்கொண்டு போய் தள்ளவில்லை என்று தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்றஉறுப்பினர் லக்ஷ்மன் நிபுணாராய்ச்சி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

ஊழல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டவர்கள் உரிய முறையில் விசாரணை நடத்தப்பட்டு, பொலிஸாரால் முறையாகக் கைதுசெய்யப்படுகிறார்கள். கடந்த அரசுகளில் இடம்பெற்ற கைதுகள் அனைத்தும் கைதுகள் அல்ல. எல்லாமே அரசியல் பழிவாங்கல்கள். பலவந்தமாக இழுத்துக்கொண்டு போய் சிறையில் தள்ளினார்கள். அரசியல் பழிவாங்கல்களுக்கு நீண்ட வரலாறு உண்டு. அந்த வரலாற்றை நாம் பார்த்துள்ளோம். அதற்கு இலக்காகி இருக்கிறோம். எமது அரசில் அப்படி எதுவும் நடக்கவில்லை. இப்போது இடம்பெறும் கைதுகள் தொடர்பில் மக்கள் மகிழ்ச்சியடைகின்றார்கள். இது அவர்களுக்கு நாம் வழங்கிய வாக்குறுதி. அதை நாம் நிறைவேற்றி வருகிறோம் - என்றார். (ஏ-75)



## சிறைச்சாலையில் சிறந்த அனுபவம்

### துமிந்த தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 17

ஹவார்ட் பல்கலைக்கழகம் சென்றால் புத்தகம்மூலமே அனுபவம் பெறலாம். எனினும், சமூக அனுபவம் என்பது சிறைச்சாலையில்தான் கிடைத்தது. ஹாவர்ட் பல்கலைக்கழகத்துக்குச் சென்றதைவிட சிறப்பான விடயம் இடம்பெற்றுள்ளது எனக் கருதுகின்றேன் என்று முன்னாள் அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

54 நாள்கள் சிறைத்தண்டனை எதிர்கொண்ட நிலையில் அவர் பிணையில் விடுவிக்கப்பட்டார். இந்நிலையில் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். சிறைத்தண்டனை அனுபவிக்கும் புலி உறுப்பினர்கள், புலிச் சந்தேகநபர்கள், உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் மற்றும் பாதாளக் குழு உறுப்பினர்களுடன்தான் சிறையில் இருந்தேன். சிறைச்சாலையில் உள்ளவர்களிடம் மறுபக்கமும் உள்ளது என்றும் குறிப்பிட்டார். (ச-44)

## சாவகச்சேரியில் நாய்கள் காப்பகம்



### நகரசபையில் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஜூலை 17

சாவகச்சேரி நகரத்தில் கட்டாக்காலி நாய்களின் தொல்லையைக் கட்டுப்படுத்தவும் விபத்துகளைத் தவிர்க்கவும் நகரத்தில் உள்ள நாய்களை அகற்றி பராமரிப்பதற்காக காப்பகம் அமைப்பதற்கு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி நகரசபையின் மாதாந்த அமர்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றபோதே நகரசபையின் உபதவிசாளர் ஞா.கிஷோர் நாய்கள் காப்பகம் அமைப்பதற்கான பிரேரணையை முன்வைத்தார்.

குறித்த பிரேரணையை வரவேற்ற சபை உறுப்பினர்கள், இடைநடுவில் கைவிடும் திட்டம் போலல்லாமல் சிறப்பாகத் தொடர்ச்சியாக முன்னெடுக்கவேண்டும் எனவும் தெரிவித்ததோடு குறித்த பிரேரணையை ஏகமனதாக நிறைவேற்றினர். (ஏ-28,27,20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வடக்கு உயர்மட்ட அதிகாரிகளுக்கு ஆளுநரால் நேற்று நியமனங்கள்

**யாழ்ப்பாணம், ஜூலை 17**

**வடக்கு மாகாணத்தின் 5 செயலாளர்கள், மாநகரசபை ஆணையாளர் மற்றும் பதில் ஆணையாளர் ஆகியோருக்கான நியமனங்கள் ஆளுநர் செயலகத்தில் வைத்து வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனால் நேற்றுப் புதன்கிழமை வழங்கிவைக்கப்பட்டன.**

பருத்தித்துறைப் பிரதேச செயலராகக் கடமையாற்றிய எஸ்.சத்தியசீலன் வடக்கு மாகாணசபைக்குப் புதிதாக உள்வாங்கப்பட்டிருந்தநிலையில் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளராகக் கடமையாற்றிய மு.நந்தகோபாலன், மகளிர் விவகார மற்றும் தொழிற்றுறையும் தொழில் முனைவோர் மேம்பாடும் மற்றும் வர்த்தக வாணிப அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட் டுள்ளார்.

கோப்பாய்ப் பிரதேச செயலராகக் கடமையாற்றிய ச.சிவஸ்ரீ வடக்கு மாகாணசபைக்குப் புதிதாக உள்வாங்கப்பட்டிருந்த நிலையில், வடக்கு மாகாண விவசாய மற்றும் கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசன, மீன்பிடி, நீர் விநியோக மற்றும் சுற்றாடல் அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

நிதியும் திட்டமிடலும், சட்டமும் ஒழுங்கும், காணி, மின்சக்தி, வீடமைப்பும் நிர்மாணமும், சுற்றுலா, உள்ளூராட்சி, மாகாண நிர்வாகம், கிராம அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி, மோட்டார் போக்குவரத்து மற்றும் போக்குவரத்து அமைச்சின் பதில் செயலாளராகக் கடமையாற்றிய அ.சோதிநாதன் அதே அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். அதேநேரம், மாகாண காணி பதில் ஆணையாளராகவும் அவரே நியமிக்கப்பட்டுள்ளார். மாகாண பொதுச்சேவை ஆணைக் குழுவின் செயலாளர் பதவி வெற்றிடமாக இருந்தநிலையில், வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளராகக் கடமையாற்றிய ஆ.சிறீ நியமிக்கப்பட்டுள்ளார்.

மகளிர் விவகாரம், புனர்வாழ்வளித்தல், சமூகசேவைகள், கூட்டுறவு அமைச்சின் செயலாளராகக் கடமையாற்றிய பொ.வாகீசன், வவுனியா மாநகரசபையின் ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளார். நிகழ்வில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் திருமதி தனுஜா முருகேசனும் பங்கேற்றார்.

(ச-113,27,66,9)

## பிப்பிலி இந்துமயானம் அபிவிருத்தி ஆராய்வு



யாழ்ப்பாணம், ஜூலை 17

மானிப்பாய், பிப்பிலி இந்துமயான அபிவிருத்தி தொடர்பில் வட்டார மக்கள் பிரதிநிதியான கலொக்கணநாதன் உஷாந்தன் களப்பயணம் மேற்கொண்டு பிரதேசசபையின் மயானக் குழுவினருடன் கலந்துரையாடினார்.

மயான நடைமுறை தொடர்பில் அறிவிப்புப் பலகை, உள்ளக மீள் கட்டுமாணம், எரி கொட்டகை புனரமைப்பு, மின்விளக்குகள் பொருத்தல், நூற்றாண்டு பழைமையான கட்டடத்தை பாதுகாத்தல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் இதன்போது மயானக் குழுவினரிடம் சுட்டிக்காட்டப்பட்டது. (ச-27)

## 'பல்டி' அடித்தவர்கள் இடைநிறுத்தம்

கொழும்பு, ஜூலை 17

தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவளித்த ஐக்கிய மக்கள் சக்தியின் ஆறு உறுப்பினர்களை கட்சி உறுப்புரிமையிலிருந்து இடைநிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பேருவளை நகரசபையின் மேயர் மற்றும் உபமேயர் தெரிவின்போது தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவளித்த பேருவளை நகர சபையின் ஐக்கிய மக்கள் சக்தியின் ஆறு உறுப்பினர்களே இவ்வாறு இடைநிறுத்தப் படவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டாரவின் கையொப்பத்துடன் வெளியாகிய ஊடக அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## முன்னாள் எம்.பி.க்கு மரணதண்டனை

கொழும்பு, ஜூலை 17

வெலிகெபொலப் பிரதேசசபையின் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் கொடித்துவக்கு ஆராச்சிலக் வசந்தா எனப்படும் அலிபேபிக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

எம்பிலிப்பிட்டிய மேல் நீதிமன்ற நீதிபதி புத்திக எஸ். ராகல நேற்று இந்தத் தீர்ப்பை வழங்கினார். 2012 ஆம் ஆண்டு வெலிகெபொல ஹட்டங்கல பகுதியில் ஒருவரைக் கடத்திக் கொலைசெய்த குற்றச்சாட்டில் அவர் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டுள்ளார். (ச)




## ஆருக்குச் சந்தை?

சிறுபிள்ளை வேளாண்மை வீடு வந்து சேராதெண்டுவினம். ஆனால் சின்னப்பிள்ளையளுக்காக இப்ப பெரியாக்களே வேளாண்மை செய்யிறதால வீட்டுக்கு மட்டுமில்லை சந்தைக்கே எல்லாச் சாமான் சக்கட்டும் வந்துசேருற காலம் இது. இப்ப ஏ.எல். மட்டும்தான் பிள்ளையள் படிக்கினம். ஓ.எல். வரைக்கும் அந்தப் பிள்ளையளின்ர தாய், தகப்பன்தான் எல்லாமே செய்யினம். பிள்ளையளைப் பள்ளிக்கூடம், ரியூசன் எண்டு எல்லா இடமும் ஏத்தி இறக்கிறதில இருந்து அவைக்கு நோட்ஸ் போட்டோக் கொப்பி எடுத்துக்குடுக்கிறது, பழைய எக்ஸாம் பேப்பர் எடுத்துச் செய்விக்கிறது, வீட்டுவேலையள் செய்யிறது, ஒப்படைக்கும் கண்காட்சிக்கும் ஆக்கவேலையள் செய்யிறது எண்டு எல்லாமே பெற்றார்தான் செய்யினம். அதால பிள்ளையளைவிடவும் பெற்றார்தான் படிக்கிறதும், பள்ளிக்கூட விசயங்களை இரவிரவா வட்ஸப் குரூப்பிலையும், போன் கோலிலையும் கதைச்சு, சண்டை பிடிக்கிறதும்கூட. பிள்ளையளின்ர படிப்பிலை பெற்றார் அக்கறையா இருக்கத்தான்வேணும். ஆனால் அது ஓவரா போறதுதான் பிரச்சினை.

இப்ப பள்ளிக்கூடங்களில சிறுவர் சந்தையள் வைக்கிறதைப் பற்றி எல்லாரும் அறிஞ்சிருப்பியள். சந்தை எண்டா எப்பிடி இருக்கும், பிள்ளையள் அந்தச் சந்தையில யாவாரம் செய்யிற முறையளை அனுபவத்தில உணருறதுக்கும், வீட்டிலயும் சூழலிலையும் கிடைக்கிற பொருள்களை எப்பிடி வருமானம் தாற பொருளா மாத்திறது எண்டு அறியவும், பிள்ளையளின்ர கற்பனைத்திறன் வளர்ந்து, கூச்ச சுபாவம் குறையவும் இந்தச் சிறுவர் சந்தையள் வைக்கிறவை. அதில சின்னப்பிள்ளையள் தங்கட வீட்டிலையும், அக்கம் பக்கத்திலையும் கிடைக்கிற பொருள்களைக் கொண்டந்து, சந்தை யாவாரியள் மாதிரி வெளிக்கிட்டு, பொருள்களை அடுக்கி, தாங்களே அதுக்கொரு விலைவைச்சு, அந்தப் பொருள்களை வாங்கச் சொல்லிக் கூப்பிடுவினம். சந்தையைப் பாக்கப்போற ஆக்களும் சின்னப் பிள்ளையளின்ர பொருள்களை வாங்கி ஊக்கப்படுத்துவினம். ஏட்டுச்சுரைக்காய்த்தனமா இருக்காமல், பிள்ளையளுக்கு உலகநடப்புகளை அறியக் கிடைக்கிற ஒரு நல்ல திட்டம்தான் இந்தச் சிறுவர் சந்தை. ஆனால் அதையும் எங்கடயாக்கள் விட்டுவைக்கேலை.

கிட்டடியில ஒரு பள்ளிக்கூடத்தில சிறுவர் சந்தையொண்டு நடந்தது. எல்லாப் பிள்ளையளும் வீட்டில இருந்து பழவகையள், மரக்கறியள், தட்டுமுட்டுச் சாமான்கள் எண்டு தங்களுக்கு ஏத்தவகையில பொருள்களைக் கொண்டந்து அடுக்கிச்சினம். ஆனால் ஒரு பிள்ளைமட்டும் ஒண்டும் கொண்டுவரேலை. "ஏன் நீங்கள் ஒண்டும் கொண்டுவரேலை?" எண்டு ரீச்சர் கேக்க, "அப்பா இப்ப கொண்டுவருவார்" எண்டு அந்தப் பிள்ளை சொல்லிமுடிக்கமுதலே தகப்பன் வாகனத்தில வந்திட்டார். அவரோட இன்னும் சில ஆக்களும் வந்து, அவர் வாகனத்தில கொண்டந்த பொருள்களை எடுத்து அங்க செற் பண்ணத் தொடங்கிட்டினம். கொஞ்சநேரத்தால அந்த இடம் சந்தை மாதிரி இல்லாமல் புடவைக்கடை மாதிரி மாறிட்டுது. அந்தப் பிள்ளையின்ர தகப்பன் உண்மையாவே புடவைக்கடை முதலாளியாம். அதால பிள்ளைக்காக, கடையில கிடந்த எல்லா உடுப்புகளையும், கண்ணாடி சோக்கேஸ்"களையும் பள்ளிக்கூடத்துக்கு கொண்டந்து, அங்க ஒரு புடைவைக்கடையே போட்டிட்டார். அந்தப் புடைவைக்கடையின்ர எழுப்பத்துக்கு முன்னால பழத்தோடையும், மரக்கறியோடையும் நின்ட மற்றப் பிள்ளையளின்ர சந்தை எடுபடாமப் போட்டுதாம். சந்தைக்கு வந்தவை எல்லாரும் "இதென்னடா புடவைக் கடை?" எண்டு அந்தக் கடையைத்தான் சுத்திச் சுத்திப் பாத்தினமேதவிர, மற்றப் பிள்ளையளைப் பெரிசாப் பாக்கேலையாம். நல்ல நோக்கத்துக்காக நடக்கிற இந்தச் சிறுவர் சந்தையில சிலர் இப்பிடி தங்கட விலாசத்தைக் காட்ட வெளிக்கிடுறதால, அதின்ர நோக்கமே அடிபட்டுப் போகுது. முதலில சின்னப்பிள்ளையளுக்கும் அவைக்காகப் படிக்கிற பெற்றாருக்கும் சந்தையளைக் கொண்டுபோய் நேரில காட்டுங்கோ. பிறகு அதைமாதிரி நீங்களும் செய்யுங்கோ எண்டு அவையின்ர பாட்டில செய்யவையுங்கோ. அதைவிட்டிட்டு இப்பிடி விலாசம் காட்ட வெளிக்கிடாதையுங்கோ. நல்ல வேளையா அந்தப்பிள்ளையின்ர தகப்பன் புடைவைக்கடை வைச்சிருந்தவர் எண்டதால பிள்ளைக்கும் புடவைக்கடை போட்டுவிட்டார். சிலவேளையில அவர் நகைக்கடை வைச்சிருந்தால், அந்தச் சிறுவர் சந்தை என்னவாகியிருக்கும் எண்டு ஒருக்கா நினைச்சுப் பாருங்கோ.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈஸ்டர் தாக்குதல் விடயங்கள் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படும்

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 17

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் பிள்ளையான் முன்கூட்டியே அறிந்திருந்தார் என்ற விடயம் உட்பட விசாரணை தொடர்பான தகவல்கள் விரைவில் நீதிமன்றத்துக்கு சமர்ப்பிக்கப் படும் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித் துள்ளார். இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் பிள்ளையான் முன்கூட்டியே அறிந்திருந்தார் என நாடாளுமன்றத் தில் நடைபெற்ற விவாதத்தின்போது நான் கருத்து வெளியிட்டிருந்தேன். இதற்கமைய வெகு விரைவில் நீதிமன் றத்திடம் அறிக்கை முன்வைக்கப்படும். நீதிமன்றத்திடம் இந்தவிடயம் முன் வைக்கப்பட்ட பின்னர், நீதிமன்றம் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் அறிவுறுத்தல்க ளுக்கமைய அடுத்தகட்ட விசாரணை முன்னெடுக்கப்படும். தற்போதும் விசாரணை இடம்பெற்றுவருகின்றது. எனினும், விசாரணைகள் மூலம் தெரி யவந்த விடயங்களை நீதிமன்றத் துக்குத் தெரியப்படுத்தவேண்டும். சில விசாரணைகள் தொடர்பில் ஊடகங்களி டம் தற்போது கருத்து வெளியிட முடி யாது - என்றார். (எ-44)

# காலணிகள் வழங்கிவைப்பு


கிளிநொச்சி, ஜூலை 17

கிளிநொச்சி முழங்காவில் மகாவித்தியாலயத்தில் கல்விகற்கும் தெரிவுசெய்யப்பட்ட 121 மாணவர்களுக்கு ரூபா 3 இலட்சத்து 40,000 பெறுமதியான புதிய காலணிகள் சந்நிதியான் ஆச்சிரமத்தினரால் நேற்று புதன்கிழமை வழங்கிவைக்கப்பட்டன.

பாடசாலையின் அதிபரின் கோரிக்கைக்கமைய சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் ஆச்சிரமத் தொண்டர் களுடன் நேரடியாகச் சென்று மாணவர்களுக்கான புதிய காலணிகளை வழங்கி வைத்தார். (ச-41-66)


## கண்ணீர் அஞ்சலி

### கணபதிப்பிள்ளை இரத்தினம்



தோற்றம் 22.05.1936 மறைவு 16.07.2025

திருநெல்வேலி கலாசாலை வீதியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை இரத்தினம் அவர்கள் நேற்று (16.07.2025) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தவமணி அவர்களின் அன்புக் கணவரும் கவிதா, கேதீஸ்வரன், காலஞ்சென்ற கஜேந்திரன் மற்றும் வனிதா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பழங்கிணற்றடி வீரகத்தி விநாயகரின் பாதக் கமலங்களை வணங்குகின்றோம்.

**பழங்கிணற்றடி வீரகத்தி விநாயகர்,
அடியார்கள்
திருநெல்வேலி.**


## ரயிலுடன்...

ரயிலுடன் மோதுண்டு குடும்பத்தலைவர் ஒருவர் நேற்றுமுன் தினம் உயிரிழந்துள்ளார். சுந்தரக்குருக்கள் ஞானசர்மா (வயது-55) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

யாழ்ப்பாணம் நகரப் பகுதிக்கு அண்மித்ததாக நேற்றுமுன் தினம் மாலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. இதன்போது படுகாயமடைந்த அவர், சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருந்த நிலையில், மேலதிக சிகிச்சையின்போது உயிரிழந்தார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவ மனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம் குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## ஓகஸ்ட்...

அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை மீது அமெரிக்கா விதித்துள்ள வரிகளைக் குறைப் பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் பேச்சு நடத்துவதற்காக சிறப்புக் குழுவொன்று ஜூலை மாதம் 18ஆம் திகதியன்று (நாளை) வொஷிங்டனுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளது. எமது முயற்சிகள் சாதகமாக முடிவடை யும் என்ற நம்பிக்கை உள்ளது. அமெரிக்காவுடன் வர்த்தக இணக்கப்பாட்டை எட்டி, எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதிக்குள் ஒப்பந்தங்களில் கைச்சாத்திட எதிர்பார்த்துள் ளோம் - என்றார். (அ-ம-44)

## கூமாங்குளம்...

உத்தரவுக்கு அமைய விளக்கமறியலில் வைக்கப்பட் டுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு வவுனியா, கூமாங்குளம் பகுதி யில் மோட்டார் சைக்கிளில் சென்ற நபரொருவர் வீதியில் விழுந்து உயிரிழந்தார். அவருடைய இறப்புக்கு, அந்தப் பகுதியில் பயணித்த போக்குவரத்துப் பொலிஸாரே காரணம் எனத் தெரிவித்து ஒரு குழுவினர் வன் முறையில் ஈடுபட்டனர். அவர்கள் பொலிஸார் மீதும் தாக்குதல்களை நடத்தியி ருந்தனர்.

இதைத் தொடர்ந்தே, வன்முறையில் ஈடுபட்ட இருவர் வவு னியா மாவட்ட குற்றத்தடுப்புப் பொலிஸாரால் கைதுசெய்யப் பட்டு, நீதிமன்ற உத்தரவுக்கு அமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். அவர்களில் ஒருவர், வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேசசபை உறுப்பினர் என்றும் தெரிவிக்கப்பட்டுள் ளது.

வன்முறையில் ஈடுபட்ட ஏணையவர் களைக் கைதுசெய்வதற் கும் பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். மாரடைப்புக் காரணமாகவே, மேற்படி நபர் உயிரிழந்தார் என்று தகவல்கள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக் கது. (அ-ம-110)


## INVITATION FOR BIDS
## THUNUKKAI PRADESHIYA SABHA

1. The **Chairman, Divisional Procurement Committee** on behalf of the **Chairman, Thunukkai Pradeshiya Sabha,Vellankulam Road, Thunukkai** invites sealed bids from eligible and qualified bidders for the works described in the table below. All the relevant details are described in the same table.
2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB)**
3. Qualification' requirements are indicated in section 4 of the Procurement Document. Additional details are provided in the Section 5 of the Procurement Document. Interested bidders may obtain further information from address given below in 6 and inspect
4. the bidding documents at the same place on any working days from during the document issuing period mentioned in table below between 09:00 hrs and 15:00 hrs.

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | Document Issuing/Purchasing Period | | | From 17.07.2025 until 30.07.2025 | | | | | | |
| | | Pre-Bid Conference | | | At 10.30 A.M on 24.07.2025 | | | | | | |
| | | Closing and Opening of Bids | | | At 02.30 P.M on 31.07.2025 | | | | | | |
| S/No | Bid ID | Description of Work | Source of Fund | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Required CIDA Grade & Speciality | Non-Refundable Fee (Rs.) | Bid Validity Period upto | Required Bid Security | | |
| | | | | | | | | | Amount (Rs.) | Validity Period | |
| 1 | PSDG/NP/MU/TKPS/2025/CWS/01 | Establishment of RO Plant at Arokkiyapuram | PSDG Fund | 2.54 | 77 | C9 above (Building) | 2,000.00 | 14-Oct-2025 | 40,000.00 | 11-Nov-2025 | |

A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Chairman, Thunukkai Pradeshiya Sabha, Vellankulam Road, Thunukkai (T.P: 021 228 4532, email: psthunukkai@gmail.com) from 9:00 hrs to **15:00 hrs. during the period stated in table above upon payment of non-refundable fees as mentioned in the table**. The method of payment will be by cash.

5. Bids (Original & Duplicate) S/No from 01 to 04 must be delivered to the Chairman, Thunukkai Pradeshiya Sabha, vellankulam Road, Thunukkai and Bids (Original & Duplicate) S/No from 05 to 07 must be delivered to the Chairman, Divisional Procurement Committee, Thunukkai Pradeshiya Sabha, Vellankulam Road, Thuukkai on or before 02.30 P.M as stated in table above. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend at **Thunukkai Pradeshiya Sabha, vellankulam Road, Thunukkai.**
6. Pre-Bid Conference will be held at Conference Hall, Thunukkai Pradeshiya Sabha, Vellankulam Road, Thunukai **commencing at 10.30 AM as stated in table above.**
7. All Bids must be accompanied by either Bid security as per the information given in the Tables.

Chairman
Divisional Procurement Committee,
Thunukkai Pradeshiya Sabha,
Vellankulam Road,
Thunukkai.
17.07.2025

(CR/45510) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

## பிரமிட் எனும் பிசாசு

இலங்கையில் தடைசெய்யப்பட்ட பிரமிட் திட்டங்கள் தொடர்பாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில், இலங்கை மத்திய வங்கி விழிப்புணர்வு வாரமொன்றை ஜூலை 14 முதல் 18 வரை 5 நாள்களுக்குக் கடைப்பிடிக்க அறிவுறுத்தியுள்ளது. ஒருவனை ஏமாற்றவேண்டுமென்றால் முதலில் அவனுக்கு ஆசையைத் தூண்டவேண்டும் எனும் திரைப்பட வசனம் பிரமிட் திட்டங்களுக்கு மிகச் சரியாகப் பொருந்தும். மனிதரின் அடிமனதில் பதிந்துள்ள பேராசையைத் தூண்டி அதை நெருப்பாக எரியவிட்டு அதில் சிலர் குளிர்காயும் முறைமையே பிரமிட் திட்டங்கள். யாரேனும் ஒருவர் 'இந்தத் திட்டத்தில் இணைந்தால் உங்களுக்குப் பணமழை கொட்டும்' என்று தூண்டில் போடுவார். அந்தத் தூண்டிலில் சிக்கியவர்கள் தாம் அதிக பணம் சம்பாதிக்க வேண்டுமானால், தமக்கு கீழே கிளைகள் போல இன்னும் சிலரை இணைப் பார்கள். அவர்கள் தமக்குக் கீழே வேறு பலரை இணைப்பார்கள். இவ்வாறு மேலிருந்து கீழாக பிரமிட் வடிவில் இந்த மோசடித் திட்டம் விரிவடையும். பிரமிட்டின் உச்சியில் இருப்பவர்களுக்குப் பணம் கொட்டிக் கொண்டிருக்க, கீழ்நிலையில் இருப்பவர்கள் தாமும் பிரமிட்டின் உச்சியை அடையவேண்டும் என்ற பேராசையில் பலரை இந்தத் திட்டத்துக்குள் இழுத்துவிடுவார்கள். இறுதியில் அந்தப் பிரமிட் வலையமைப்பு சடுதியாகக் கலைந்துவிட, உள்ளதையும் இழக்கவேண்டிய நிலைக்கு இந்தத் திட்டங்கள் கொண்டுசெல்கின்றன.


பனாமா போன்ற தொலைதூர முகவரிகளில் நிறுவனங்களைப் பதிவுசெய்துவிட்டு, பிட்காயின் எனும் எண்ணிமப் பணத்தின் மூலம் இந்தப் பிரமிட் பொம்மலாட்டத்தை பணமுதலைகள் நடத்துகின்றன. முன்னர் இந்தத் திட்டங்களில் ஆட்களை இணைக்க நேரடியாகச் சென்று, நபர்களின் 'மண்டையைக் கழுவி' அவர்களை இந்தச்சதிவலைக்குள் இழுத்துவிட்டார்கள். இப்போது அப்படியான எந்தக் கஷ்டங்களும் இல்லாமல், சமூக ஊடகங்களின் துணையோடு இருந்த இடத்திலேயே பலரைத் தம் பிரமிட் வலைக்குள் வீழ்த்துகிறார்கள். பாமரர்களை விடவும் படித்தவர்கள், பணக்காரர்கள்தான் இந்தத்திட்டத்தின் பிரதான பலிக்கடாக்களாக மாறியிருக்கின்றனர். பணம் என்னும் பிசாசு இவர்களின் சிந்திக்கும் திறனை மறைப்பதாலோ என்னவோ கண்ணைமூடிக்கொண்டு இந்தத் திட்டத்தில் குதித்து, கையைச் சுட்டுக்கொண்ட பின்னர்தான் அவர்களுக்கு உண்மை புரிகின்றது.

இந்தத் திட்டங்களில் இணையவேண்டாம் என்று மத்தியவங்கி பலமுறை எச்சரித்துவிட்டது. இந்தத் திட்டங்களில் மற்றவர்களை இணைப்போருக்குத் தண்டப்பணம், சிறைத்தண்டனை போன்றன கிடைக்கும் என்று சொல்லிய பின்னரும்கூட ஏதோ வொரு ரூபத்தில் இந்தத் திட்டம் தொடர்கிறது. ஒவ்வொரு காலத்திலும் விதவிதமான நிறுவனங்களின் பெயர்கள், திட்டங்களின் பெயர்கள் என்று இந்தப் பிரமிட் திட்டங்கள் பல அவதாரங்களை எடுத்தாலும், அவற்றின் நோக்கமெல்லாம் ' பிறரின் காசை உறிஞ்சுவது' மட்டும்தான். உண்மையான செல்வம் 'என்பது வியர்வைத் துளியிலேயே பிறக்கும் என்பதை வரலாறு பல்லாயிரம் முறை நிரூபித்துள்ளது. பிரமிட் திட்டங்கள் புதிய பெயர்களில்.தொடரும்; ஆனால் விழிப்புணர்வு எனும் கேடயம் மட்டுமே உங்களைப் பாதுகாக்கும். எனவே எப்போதும், அதிக பணம் கிடைக்கும் என்ற ஆசையை எவரெல்லாம் உங்களுக்குத் தூண்டுகிறார்களோ, அப்போதெல்லாம் கொஞ்சம் எச்சரிக்கையாக இருந்தாலேபோதும், உங்கள் பணமும் உழைப்பும், மகிழ்வும் தொலையாமல் காக்கலாம்.

நாளொரு நல்வார்த்தை

உங்களுக்கு என்ன நடக்கிறது என்பது பெரிய விடயமல்ல, அதற்கான உங்களின் எதிர்வினை என்ன என்பதே முக்கியம்.

– எபிக்டடஸ் –






## அபிவிருத்தித் திட்டங்களை விரைவாகச் செயற்படுத்துக

### உள்ளூராட்சி அமைச்சு அறிவுறுத்து

கொழும்பு, ஜூலை 17

**அபிவிருத்தித் திட்டங்களை விரைவாகச் செயற்படுத்த வேண்டும் என்று பொதுநிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு உள்ளூராட்சி மன்றங்களுக்கு அறிவித்துள்ளது.**

இதுதொடர்பில் பிரதி அமைச்சர் ருவன் செனரத் தெரிவிக்கையில், கடந்த வரவு - செலவுத் திட்டத்தில் உள்ளூராட்சிமன்றங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக 23 ஆயிரம் மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மாகாண சபைகளின் அபிவிருத்திப் பணிகளுக்காகவும், 53 ஆயிரம் மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் நவம்பர் மாதத்துக்கு முன்னர் அபிவிருத்தி திட்டங்களுக்கு இந்த நிதி பயன்படுத்தப்படவேண்டும். சில உள்ளூராட்சி மன்றங்களை அமைப்பதில் ஏற்படும் தாமதம் காரணமாக, அவற்றின் அபிவிருத்தி நடவடிக்கைகளும் தாமதமாகியுள்ளன.
அந்த உள்ளூராட்சிமன்றங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதியை மீண்டும் திறைசேரிக்குத் திருப்பி அனுப்ப நேரிடும் - என்றார். (எ-இ)

## 35 கிலோ தங்கத்துடன் ஒருவர் கைது

கொழும்பு, ஜூலை 17

சட்டவிரோதமாக நாட்டுக்குக் கொண்டுவரப்பட்ட 110 கோடி ரூபா பெறுமதியான 35 கிலோகிராம் தங்கத்துடன் ஒருவர் விமானநிலைய சுங்க அதிகாரிகளால் அண்மையில் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபர் டுபாயில் இருந்து நாட்டுக்கு வந்த போதே இந்தக் கைது இடம்பெற்றுள்ளது.
அவரிடமிருந்து 195 தங்க பிஸ்கட்டுகள் மற்றும் 13 கிலோ நகைகள் கையகப்படுத்தப்பட்டுள்ளன. (ச-இ)

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு

## 1,44,379 பேர் இவ்வாண்டில் பயணம்



கொழும்பு, ஜூலை 17

2025ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஜூன் மாதம் வரையிலான ஆறு மாத காலப்பகுதியில், ஒரு இலட்சத்து 44 ஆயிரத்து 379 இலங்கையர்கள் வேலைவாய்ப்புக்காக வெளிநாடுகளுக்குப் பயணித்துள்ளனர் என இலங்கை வெளிநாட்டுவேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.
இந்தக் காலப்பகுதியில் 88 ஆயிரத்து 684 ஆண் தொழிலாளர்களும் 55ஆயிரத்து 695 பெண் தொழிலாளர்களும் வேலைவாய்ப்புக்காக வெளிநாடு சென்றுள்ளனர்.
இதேவேளை, இந்த ஆண்டின் முதல் 6 மாதங்களில் வெளிநாட்டு வேலைவாய்ப்பில் இருந்துவரும் இலங்கையர்கள் 3.73 பில்லியன் டொலரை நாட்டுக்கு அனுப்பியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## வழக்கறிஞர் வீட்டுக்கு துப்பாக்கிச்சூடு



கொழும்பு, ஜூலை 17

மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத துப்பாக்கிதாரி ஒருவர் வெலிகம உடுகாவப் பகுதியில் உள்ள ஒரு வழக்கறிஞர் வீட்டின்மீது துப்பாக்கிச்சூடு நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளார். இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 4.40 மணியளவில் நடந்துள்ளது. இந்தத் துப்பாக்கிச்சூட்டில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை என்றும், வீட்டின் வாயிலைக் குறிவைத்துத் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## சுஜீவவுக்குப் பிணை

கொழும்பு, ஜூலை 17

நாடாளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்கவுக்கு நேற்று கொழும்புக் கோட்டை நீதவான் நீதிமன்றம் பிணை வழங்கியுள்ளது.
சுமார் 100 மில்லியன் ரூபா மதிப்புள்ள சட்டவிரோதமாக ஒழுங்கு செய்யப்பட்ட சொகுசு வாகனம் பற்றிய குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

நாளை 18.07.2025
வெள்ளிக்கிழமை - ஆடி 02
சுபநேரம் : 06.00 07.30
ராகுகாலம் :10.30- 12.00

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஜுலை 17
தென்மராட்சி மீசாலை பழ உற்பத்தியாளர் விற்பனைக் கூட்டுறவுச் சங்கத்தின் (பழமுதிர்சோலையின்) வருடாந்த விசேட பொதுக்கூட்டமும் புதிய இயக்குநர் சபையின் தெரிவும் சங்கத்தலைவர் செ.ஜெயசந்திரன் தலைமையில் எதிர்வரும் 26ஆம் திகதி சனிக்கிழமை மு.ப. 10மணிக்கு சங்கத்தின் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ச-41-159)




காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கக்கோரியும், பயங்கரவாதத் தடைச் சட்டம் உட்பட அடக்குமுறைச் சட்டங்களை இரத்துச் செய்ய வலியுறுத்தி சம உரிமை இயக்கத்தால் கிளிநொச்சியில் கையெழுத்துச் சேகரிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. (எ-113)

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜுலை 17
யாழ்ப்பாணம் நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி கோவில் நடத்தும் வாராந்தச் சுக்கிரவாரக் கந்தபுராணபடனத் தொடரின் 30ஆவது சொற்பொழிவு கோவில் சண்முகவிலாச மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை மாலை 5.30மணிக்கு இடம்பெறவுள்ளது.
சிவநெறிப் பிரகாசர், சமய ஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ள நிகழ்வில் கோவிலின் பிரதம குருக்கள் ஸ்கந்த குரு ஞானபானு, சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாதக் குருக்களின் ஆசியுரையும், பரிபாலனசபைத் தலைவர் சி. தயாநாதனின் தலைமையுரையும், இளஞ்சைவப்புலவர், பிரசங்கச்சுடர் த. மனோஜ்குமார் "மாயையுபதேசப் படலம்" எனும் விடயப்பொருளில் சிறப்புச் சொற்பொழிவும் இடம்பெற வுள்ளன. (ச-41)

★★★★

யாழ்ப்பாணம், ஜுலை 17
சிறுப்பிட்டி மேற்கு அருள்மிகு ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயத்தில் சைவ வாழ்வியலில் திருவிளையாடற்புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தும் முகமாக சிவநெறிப் பிரகாசர் சமய ஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் நடத்தும் வாராந்தத் திருவிளையாடற்புராணச் சிறப்புச் சொற்பொழிவுத்தொடர்-14 நாளை வெள்ளிக்கிழமை மாலை 4மணிக்கு நடைபெறவுள்ளது. பரஞ்சோதிமுனிவர் குருபூஜையை அடுத்து மாணவர்களின் கலைநிகழ்வும், சைவப் புலவர் பிரசங்க பூஷணம் க. கைலநாதனின் "மாணிக்கம் படலம்" எனும் சொற்பொழிவும் இடம்பெறவுள்ளன. (ச-41)

# கனிய மணல் அகழ்வுக்கு மன்னார் மக்கள் எதிர்ப்பு

### ஆய்வுக்காக வந்த குழு திரும்பியது

**மன்னார், ஜுலை 17**
**மன்னாரில் கனியமணல் அகழ்வுக்கான மதிப்பீட்டு அறிக்கையைத் தயாரிப்பதற்குக் கொழும்பில் இருந்து வந்த அதிகாரிகள் மக்களின் எதிர்ப்பை அடுத்துத் தமது நடவடிக்கைகளைக் கைவிட்டுத் திரும்பிச்சென்றுள்ளனர்.**

பேசாலை கிராம அலுவலர் பிரிவில் கனியமணல் அகழ்வுக்கான அனுமதியை வழங்குவதற்காக சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையைத் தயாரிப்பதற்காக, நீர்ப்பரிசோதனை மேற்கொள்வதற்கு நீர் வழங்கல் சபை அதிகாரிகள் கொழும்பில் இருந்து நேற்றுமுன்தினம் வந்திருந்தனர். ஆயினும் பிரதேச மக்கள் அதற்குக் கடும் எதிர்ப்பு வெளியிட்டதால் அதிகாரிகள் தங்கள் நடவடிக்கைகளைக் கைவிட்டுத் திரும்பிச்சென்றுள்ளனர்.
ஏற்கனவே இரு தடவைகள் இவ்வாறான ஆய்வுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தபோதும், மக்களின் எதிர்ப்பால் அவை கைவிடப்பட்டிருந்தன. மன்னாரில் இவ்வாறான திட்டங்களை முன்னெடுப்பது தொடர்பில் விசேட கலந்துரையாடல் நடத்தப்பட்ட பின்னரே இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என அரசாங்கம் ஏற்கனவே தெரிவித்திருந்த நிலையில் இவ்வாறு ஆய்வுப் பணிகளை மேற்கொள்ளக்கூடாது என்று பொதுமக்கள் வலியுறுத்தியுள்ளனர்.
இவ்வாறான ஆய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளக்கூடாது என்றும், மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவின் அனுமதி பெற்றே அவை மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் கடந்த மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்திலும் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. ஆயினும் இந்தத் தீர்மானங்களைமீறி கனியமணல் அகழ்வுக்கான மதிப்பீட்டு அறிக்கையைத் தயாரிப்பதற்காக வெவ்வேறு திணைக்களங்கள் ஆய்வு நடவடிக்கைகளுக்காக வருகின்றனர் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (எ-56)

## வளங்கள் பகிர்வில் சமச்சீர் பேணுங்கள்

### வடக்கு ஆளுநர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜுலை 17
சில பாடசாலைகளில் வளங்கள் குவிந்துள்ளன. அதற்கு அருகிலுள்ள பாடசாலைகளில் எந்தவொரு வளங்களும் இல்லாமல் காணப்படுகின்றன. எனவே வளங்கள் சமச்சீராகப் பகிரப்படுவதற்கு வலயக் கல்விப் பணிப்பாளர்களே பொறுப்பு என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் பணிப்புரை விடுத்துள்ளார்.
இளைஞர் விவகார அமைச்சின் கீழ் இந்த ஆண்டு நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களின் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம் தொடர்பில் ஆராயும் மாதாந்தக் கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.
இதன்போது கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சை பெறுபேறுகளில் வடக்கு மாகாணம் தொடர்ந்தும் பின்தங்கியுள்ள நிலைமை தொடர்பில் ஆராயப்பட்டது. கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் முன்னிலையில் இருந்தாலும், சாதாரண தரப் பரீட்சையில் முன்னேற்றத்தைக் காண்பிக்க முடியாமைக்கான காரணங்கள் விரிவாக ஆராயப்பட வேண்டும் என ஆளுநர் குறிப்பிட்டார்.
அத்துடன் அடுத்த ஆண்டுக்குரிய வேலைத்திட்டங்களை இன்னும் ஒரு மாத காலத்தினுள் வழங்குமாறும் பணிப்புரை விடுத்தார். (ச-66,113,159)




சுகாதாரச்சீர்கேட்டுடன்

## பாண் விநியோகம் ரூ.60,000 தண்டம்

யாழ்ப்பாணம், ஜுலை 17
போதிய சுகாதார வசதியின்றி, நடமாடும் முச்சக்கரவண்டிமூலம் பாண் விநியோகம் செய்த நபருக்கு 60 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது. நீர்வேலியில் உள்ள வர்த்தகநிலையத்தில் சுகாதாரப்பிரிவினர் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையில் குறித்தநபர் சிக்கினார்.
பாண் விநியோகத்துக்கான உரிமம் பெற்றுக்கொள்ளாமை, உணவைக் களஞ்சியப்படுத்துவதற்கான சுகாதாரவசதி முச்சக்கரவண்டியினுள் காணப்படாமை, சுகாதாரப்பிரிவினரிடம் மருத்துவ சான்றிதழ் பெற்றுக்கொள்ளாமை போன்ற குற்றச்சாட்டுகளின் கீழ் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. (ச-25, 17)

யாழ்.மாவட்டச் செயலக

## புதிய மேலதிக செயலராக ஜெயகரன் பொறுப்பேற்பு



யாழ்ப்பாணம், ஜுலை 17
யாழ்.மாவட்டச் செயலகத்தின் புதிய மேலதிக செயலராக (காணி) பால சுந்தரம் ஜெயகரன் நேற்றுப் புதன்கிழமை காலை 8.50 மணியளவில் யாழ்.மாவட்டச்செயலகத்தில் மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன் முன்னிலையில் தமது கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.
நிகழ்வில் மாவட்ட மேலதிக செயலர் கே.சிவகரன், பிரதம கணக்காளர், திட்டமிடல் பணிப்பாளர், பிரதம பொறியியலாளர், பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், உதவி மாவட்டச் செயலர், கணக்காளர்கள், நிர்வாக உத்தியோகத்தர் மற்றும் உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். பா.ஜெயகரன் முன்னர் உடுவில் பிரதேச செயலாளராகக் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-66)

## தவணைப் பரீட்சைக் கட்டணம் மாணவர்களிடம் அறவிடப்படாது

### வடக்குப் பிரதம செயலாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜுலை 17
பாடசாலைகளில் நடைபெறும் தவணைப் பரீட்சைக்கான கட்டணங்கள் இனி மாணவர்களிடமிருந்து அறவிடப்படாது. அதற்குரிய நிதி மாகாணசபையால் வழங்கப்படும் என வடக்கு மாகாணப் பிரதம செயலாளர் திருமதி. தனுஜா முருகேசன் தெரிவித்துள்ளார்.
அதேவேளை பரீட்சை வினாத்தாள் திருத்துவதற்குக் கொடுப்பனவு வழங்கமுடியாது எனவும் அவர் மேலும் கூறினார்.
வடக்கு மாகாணக் கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சின்கீழ் இந்த ஆண்டு நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களின் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம் தொடர்பில் ஆராயும் மாதாந்தக் கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்றபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார். (ச-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்:** எதிலும் பொறுமை அவசியம். செலவுகளை சமாளிக்கத் தேவையான பணம் இருப்பதால் பிரச்சினை எதுவும் இருக்காது. புதிய முயற்சிகளில் நன்றாக யோசித்து இறங்கவும். அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும்.

**இடபம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். பிள்ளைகளால் தேவையற்ற செலவுகள் ஏற்படக் கூடும். உணவு விஷயத்தில் கவனமாக இருக்கவும். உறவினர்கள் வருகையால் வீட்டில் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். பொறுமை அவசியம்.

**மிதுனம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே கவனம் செலுத்தவும். உடல்நலனில் கவனம் தேவை. உறவினர்கள் உதவிகேட்டு வருவார்கள். வழியில் எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். உறவினர்கள் வருகையால் உற்சாகம் ஏற்படும்.

**கடகம்:** காரியங்கள் அனுகூலமாகமுடியும். ஆனால், புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். செலவுகள் ஏற்படும். ஆதாயம் உண்டாகும். மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். பணிச்சுமை அதிகரிக்கும்.

**சிம்மம்:** தொடங்கும் காரியங்கள் சாதகமாக முடியும். சிலருக்கு திடீர்செலவுகளால் கையிருப்பு குறையும். குடும்பம் தொடர்பான முடிவுகள் எதுவும் எடுக்கவேண்டாம். சக ஊழியர்களை அனுசரித்துச் செல்லவும்.

**கன்னி:** எந்த முடிவையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது. குடும்பத்தில் மற்றவர்களுடன் அனுசரித்துச் செல்லவும். சிறு சிறு பிரச்சினை ஏற்படக்கூடும். பொறுமை அவசியம். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.

**துலாம்:** உற்சாகமாகவும் பரபரப்பாகவும் செயற்படுவீர்கள். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளை நிறைவேற்ற செலவு செய்ய நேரிடும். கையிருப்பு கரையும். உங்கள் பொறுப்புகளைப் பகிர்ந்துகொள்வது ஆறுதலாக இருக்கும்.

**விருச்சிகம்** : தொடங்கும் காரியங்கள் வெற்றிகரமாக முடியும். உறவுகளால் எதிர்பாராத ஆதாயம் ஏற்படக்கூடும். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. வியாபாரத்தில் சக வியாபாரிகளால் சிறு சங்கடங்கள் ஏற்படலாம்.

**தனுசு:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். அலைச்சலுடன் ஆதாயமும் இருக்கும். பிள்ளைகளால் திடீர் பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. அலுவலகத்தில் அதிகாரிகளின் ஆலோசனை பயன் தருவதாக இருக்கும்.

**மகரம்:** எதிலும் அவசரமில்லாமல் செயற்படவேண்டிய நாள். வீண்மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். செலவுகள் ஏற்படக்கூடும். கருத்துவேறுபாடு ஏற்படக்கூடும்.

**கும்பம்:** மனதில் இனந்தெரியாத குழப்பம் ஏற்படக்கூடும். அன்றாடப் பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. வீண்விவாதங்கள் ஏற்படக்கூடும் என்பதால், பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

**மீனம்:** புதிய ஆடை, ஆபரணங்களை வாங்கும் யோகம் உண்டாகும். உறவினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பான சூழ்நிலை ஏற்படும். புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். வாழ்க்கைத் துணையால் மகிழ்ச்சி உண்டாகும்.




## வடக்கு சமூகத்தை மேம்படுத்துவதற்கு: 2025 தளிர் நிதி விருது வழங்கும் விழாவில் வடக்கின் முயற்சியாளர்கள் நிறுவனங்களை ஆரம்பிப்பதற்கு டேவிட் பீரிஸ் குழு ரூ. 20 மில்லியனுக்கும் அதிகமான நிதியை வழங்குகிறது

புதுமை, தொழில்முனைவு மற்றும் பிராந்திய அதிகாரமளித்தல் ஆகியவற்றின் மைல்கல் கொண்டாட்டமாக, யாழ்ப்பாணத்தில் உள்ள நார்த் கேட் ஹோட்டலில் நடைபெற்ற 2025ஆம் ஆண்டுக்கான தளிர் நிதி விருது வழங்கும் விழாவில், தேர்ந்தெடுக்கப்பட்ட இளம் தொழில்முனைவோருக்கு டேவிட் பீரிஸ் குழுமம் ரூ. 20 மில்லியனுக்கும் அதிகமான நிதியை வழங்கியது. டேவிட் பீரிஸ் குழுமத்தின் "வடக்கு மேம்பாட்டுத் திட்டத்தின்" கீழ் இலங்கையின் வடக்குப் பகுதியில் ஆர்வமுள்ள தொழில் முனைவோரை மேம்படுத்துவதற்காக சில மாதங்களுக்கு முன்பு தொடங்கப்பட்ட குழுவின் தொலைநோக்குப் பார்வைகொண்ட 'தளிர்' முயற்சியின் அடுத்த கட்டமாக இந்த நிகழ்வு அமைந்தது.

தமிழில் "முளை" என்று பொருள்படும் தளிர், வளர்ச்சியின் உணர்வையும் புதிய தொடக்கங்களையும் பிரதிபலிக்கிறது இப்போது தங்கள் முத்திரையைப் பதிக்கத் தயாராக இருக்கும் இளம் வணிக மணங்களின் ஆற்றல் மற்றும் இலட்சியத்திற்கான பொருத்தமான சின்னமாகும். மூலதனம் மற்றும் வழிகாட்டுதலை வழங்க வடிவமைக்கப்பட்ட இந்தத் திட்டம், வாகனம், logistics, தகவல் தொழில்நுட்பம், விவசாயம், சுற்றுலா மற்றும் ஏற்றுமதி உள்ளிட்ட முக்கிய துறைகளில் அளவிடக்கூடிய வணிக முயற்சிகளை ஆதரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. விழாவில் நான்கு நபர்கள் தங்கள் வணிக யோசனைகளைத் தொடங்கத் தலா 500,000 ரூபா பெற்றனர் அதே நேரத்தில் மூன்று சிறந்த முயற்சியாளர்கள் சுமார் 20 மில்லியன் ரூபாய்க்கு மாற்றத்தக்க நிதியைப் பெற்றனர். இந்தத் தொழில்முனைவோர் 100க்கும் மேற்பட்ட விண்ணப்பதாரர்களிடமிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டனர், மேலும் 26 பேர் திட்டத்தின் நம்பகத்தன்மை, புதுமை மற்றும் சமூகத் தாக்கத்தை மதிப்பிடுவதற்காக. வடிவமைக்கப்பட்ட இரண்டாவது சுற்றுப்பட்டறைக்குப் பட்டியலிடப்பட்டனர்.

நிகழ்வில் பேசிய தளிர் திட்டத் தலைவரும் டேவிட் பீரிஸ் ஹோல்டிங்ஸ் (பிரைவேட்) லிமிடெட்டின் குழுத் தலைமைத் தகவல் அதிகாரியுமான ஜெயராஜ் சயந்தன், "இந்த இளம் தொலைநோக்குப் பார்வையாளர்கள் காட்டிய மற்றும் முழுமையான படைப்பாற்றல் அர்ப்பணிப்பால் நாங்கள் ஈர்க்கப்பட்டோம். தளிர் என்பது வெறும் நிதியளிக்கும் திட்டம் மட்டுமல்ல இது நிலையான, தொலைநோக்குச் சிந்தனைகொண்ட தொழில் முனைவோர் மூலம் வடக்கில் நீண்டகாலப் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் ஒரு தளமாகும்" என்று குறிப்பிட்டார்.

டேவிட் பீரிஸ் குழுமத்தின் குழுமத் தலைவரும் நிர்வாக இயக்குநருமான ரோஹண திசாநாயக்க, பிரதம விருந்தினராகப் பங்குபற்றினார். இந்த நிகழ்வில் வடக்கு தொழில்முனைவோர் ஆலோசகர் மற்றும் திட்ட ஆலோசகர் திரு. ஜெகன் அருளையா; வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த பல அரசு அதிகாரிகள் மற்றும் குழு மற்றும் அதன் நிறுவனங்களின் மூத்த தலைமைத்துவமும் வரவேற்கப்பட்டன. தளிர், பீரிஸின் வழிகாட்டுதலின்கீழ் 2021ஆம் ஆண்டு டேவிட் பீரிஸ் குழுமத்தால் தொடங்கப்பட்ட ஒரு பரந்த வடக்கு மேம்பாட்டு உத்தியின் ஒரு பகுதியாகும். பல ஆண்டுகளாக, குழுமம் பிராந்தியத்தில் பல்வேறு தாக்கத்தை ஏற்படுத்தும் முயற்சிகளை அறிமுகப்படுத்தியுள்ளது. யாழ்ப்பாணத்தில் ஒரு ஆட்டோ மொடிவ் பட்டறையைத் தொடங்கியது மற்றும் இடிரைவ் பிராண்டின் கீழ் ஒரு முன்னோடியான மின்சார முச்சக்கரவண்டி டாக்ஸி சேவையை அறிமுகப்படுத்துவது முதல் பெண்கள் அதிகாரமளிப்புத் திட்டங்களை மேம்படுத்துவது மற்றும் நகரில் ஒரு நவீன தகவல் தொழில்நுட்ப மேம்பாட்டு மையத்தை நிறுவுவது வரை. இதற்கு இணையாக, குழுவின் நிதிச் சேவைகள் பிரிவு SMEகள், விவசாயம் மற்றும் மீன்பிடித்துறைக்கு முக்கியமான ஆதரவை வழங்கியுள்ளது, அதே நேரத்தில் சமூகத்தால் இயக்கப்படும் திட்டங்கள் கல்வி, சுகாதாரம், விளையாட்டு, சுத்தமான நீர் மற்றும் சுகாதாரம் ஆகியவற்றை மேம்படுத்தியுள்ளன. வடக்கில் ஆயிரக்கணக்கானோரின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தியுள்ளன.

நிதி ஆதரவை மூலோபாய வழிகாட்டுதலுடன் கலப்பதன் மூலம் உள்நாட்டு நிறுவனத்தை வளர்ப்பதற்கான குழுவின் சமீபத்திய உறுதிமொழியாக தளிர் உள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட தொழில்முனைவோர் இப்போது தங்கள் பயணத்தைத் தொடங்குவார்கள், அவர்களின் முயற்சிகள் செழிக்கத் தேவையான கட்டமைப்பு மற்றும் ஆதரவைக் கொண்டிருப்பதை உறுதிசெய்வார்கள் இலாபத்திற்காக மட்டுமல்ல, நீண்டகால சமூகத் தாக்கத்துக்காகவும் தளிர் மற்றும் அதன் வரவிருக்கும் கட்டங்கள் பற்றிய கூடுதல் தகவலுக்கு, www.dpg.lk/thalir ஐப் பார்வையிடவும்.

## யாழில் களைகட்டிய பனங்கட்டி விற்பனை

யாழ்ப்பாணம், ஜூலை 17

ஆடிப்பிறப்பை முன்னிட்டு பனங்கட்டி விற்பனை நேற்று யாழில் களைகட்டியது.

கற்பகம் விற்பனை நிலையம் மற்றும் திருநெல்வேலி, யாழ்.நகர் போன்ற இடங்களில் இந்தப் பனங்கட்டி விற்பனை சூடுபிடித்துக் காணப்பட்டது.

ஆடிக்கூழ் காய்ச்சும் முகமாக மக்கள் ஆர்வத்துடன் அதனை வாங்கிச்சென்றனர். (ச-17)



## ஆடிக்கூழ் காய்ச்சும் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூலை 17

யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் நடத்தும் ஆடிக்கூழ் காய்ச்சும் நிகழ்வு சங்கக் கேட்போர் கூடத்தில் இன்று வியாழக்கிழமை சங்கத் தலைவர் மு.ஜெ. சுஜீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ச-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




SALE
மாபெரும்
மலிவு விற்பனை

50%
கழிவு

SHIRTS | T-SHIRTS | TROUSERS | DENIMS

18 19 20
ஜீலை (JULY)

YMCA
மண்டபம் யாழ்ப்பாணம்
NO. 109 Kandy Road, Jaffna
காலை 9.30 மணிமுதல் மாலை 8.00 மணி வரை
077 4766 296 | 077 1242 619

Signature


# யாழ்.நகரில் ஆடிப்பிறப்பு நிகழ்வு

சோமசுந்தர ஞானத் தமிழ்மன்றத்தின் ஏற்பாட்டில் ஆடிப்பிறப்புக் கொண்டாட்ட நிகழ்வு ஆடிப்பிறப்பு நன்நாளான இன்று வியாழக்கிழமை காலை09 மணியளவில் யாழ்ப்பாணம் பிரதான பேருந்து நிலையத்துக்கு முன்பாக அமைந்துள்ள தங்கத் தாத்தா நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் உருவச் சிலையடியில் சோமசுந்தர ஞானத் தமிழ் மன்றத்தின் தலைவர் கே.எஸ்.சிவஞானராஜா தலைமையில் இடம்பெறவுள்ளது. நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.

(ச-66)

## கூட்டம்

பச்சிலைப்பள்ளிப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக்குழு உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான பொதுக்கூட்டம் அந்தந்தக் கிளைகளில் நாளைமறுதினம் சனிக்கிழமை மு.ப. 10 மணிக்கு நடைபெறவுள்ளது. சங்க உறுப்பினர்களுக்குப் பொதுக்கூட்டம் தொடர்பான அறிவித்தலை பொதுக் கூட்டம் நடத்த அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் அறிவித்துள்ளார்.

(ச-25,9)


## சமையலாளர் தேவை

சுண்டுக்குளியில் ஆறுபேர் கொண்ட குடும்பம் ஒன்றிற்கு சமையலாளர் தேவை (காலை, மதியம், இரவு நேர உணவுகள்). உணவு வழங்கப்படும்.

- வேலை நேரம் காலை 06.00 - மாலை 05.00 வரை
- வயதெல்லை - 18 - 50
- சம்பளம் நாள் ஒன்றிற்கு 1500/-
- நேர்மையாகவும் சுத்தமாகவும் இருத்தல் வேண்டும்
- தேவையின் போது வீட்டிற்கு அருகில் உள்ள கடைக்குச் சென்று பொருட்கள் வாங்குதல் வேண்டும்

076 071 2085


## பெயர் மாற்றம்

தம்பிராய் பூநகரியில் வசிக்கும் பசுபதி சங்கரன் ஆகிய நான் எனது பெயரை பசுபதி சங்கரப்பிள்ளை என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் பசுபதி சங்கரப்பிள்ளை என்றே கையொப்பமிட்டு பயன்படுத்துவேன் என இலங்கை சோசலிச குடியரசிற்கு அமைவாக உறுதிப்படுத்துகின்றேன்.

பசுபதி சங்கரப்பிள்ளை

(CS 30491)

## பெயர்மாற்றம்

சாவகச்சேரி புகையிரத வீதியை வசிப்பிடமாகக் கொண்ட கறுப்பண்ணன் பாலகிருஷ்ணன் ஆகிய நான் இன்று தொடக்கம் பெரியண்ணன் பாலகிருஷ்ணன் என பெயர்மாற்றம் செய்கின்றேன் என்பதை இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

பெரியண்ணன் பாலகிருஷ்ணன்


## காணி விற்பனைக்கு உண்டு

கிளி/ கோணாவில் கிழக்கு முறிப்புக்குளம் பகுதியில் 2 ஏக்கர் காணி இதில்

- மின்சார வசதி உள்ளது
- வற்றாத தண்ணீர்கிணறு 2000L தண்ணீர்தாங்கியுடன் நீர்க்குழாய் வசதி உள்ளது.
- மலசலகூட வசதி (Commert)
- பாதுகாப்பு கம்பிவேலி, Gate போடப்பட்டுள்ளது.
- 100 க்கு மேற்பட்ட காய்க்கும் நிலையில் உள்ள தென்னை மரங்களுடன் 60 ஒரு வருட தென்னங்கன்றுகளும் உள்ளன.
- 10 கஜு மரங்கள், மற்றும் மா, பலா மரங்களும் உள்ளன.
- வீடு அமைக்க, தோட்டம், பண்ணை அமைக்கக்கூடிய நிலமும் அமைந்துள்ளது.

தொடர்புகளுக்கு:
076 321 0034


## DEMOCRATIC SOCIALIST REPUBLIC OF SRILANKA
### Expressions of Interest

**Name of Procuring Entity : Valikamam South Pradeshiya Sabha**

**Consultancy Service for Future Infrastructure Projects**

The Consultants Procurement Committee on behalf of the **Valikamam South Pradeshiya Sabha, Chunnakam** invites eligible consultants to indicate their interest in providing the services described herein. Interested consultants must provide information indicating that they are qualified to perform the services **General brochures, description of similar assignments, experience in similar conditions, Financial Strength, availability of appropriate skills among staff.**

Consultants may associate to enhance their qualifications.
A Consultant firm will be selected in accordance with the procedures set out in the Guidelines for Selection and Employment of consultants, published by National Procurement Agency following Least Cost Selection (LCS) method.
Interested consultants shall obtain Terms of Reference, details to be submitted with the EOI and any further information at the address below from **17.07.2025 until 30.07.2025 at 9.00 a.m. to 3.00 p.m**
Expressions of interest should include the following information:

(a) description of similar assignments, experience in similar conditions indicating the name of client , nature of assignment, location, contract value.
(b) status of the firm including the names of the owners and names and qualifications of the key staff
(c) any suggestions to associate with another firm or individual
(d) any other relevant information

**EOI must be delivered to the address below by 31.07.2025**

Chairman,
Consultants Procurement Committee,
Valikamam south Pradeshiya Sabha,
KKS Road, Chunnakam

17.07.2025

**Tel : 021-2240017/0212244045**
**Fax : 021-2240327**
**E-mail:vspsch@gmail.com**

(CR/45527) J-1

## பெறுகைக்கான அழைப்பு
### உணவு குடிபானம் மற்றும் சிற்றுண்டிகளை வழங்கல்
### மாகாணக் கல்வித் திணைக்களம் - வடமாகாணம்
NP/20/FB/PROC/FOOD/2025

மாகாணக்கல்வித் திணைக்களத்தால் 15.09.2025 - 14.09.2026 வரையான காலப் பகுதிக்கு செயலமர்வுகள் மற்றும் நிகழ்வுகளிற்கு உணவு குடிபானம் மற்றும் சிற்றுண்டிகளை கொள்வனவு செய்வதற்காக திணைக்களப் பெறுகைக்குழு (பெரியது) முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றது.

1. பெறுகைகள் அனைத்தும் தேசிய விலைக்கேள்வி அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்படும்.
2. மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணம் : ரூபா 1000.00
3. பெறுகைப் பத்திரங்களை பெற்றுக்கொள்ளும் காலப்பகுதி: அலுவலக நாட்களில் 21.07.2025 தொடக்கம் 04.08.2025 வரையான காலப்பகுதியில் 9.00 மணிதொடக்கம் 15.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்
4. விலைக்கேள்விகள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய திகதியும் இடமும் : 05.08.2025 திகதி 10.00 மணிக்கு முன்பதாக வடமாகாணக் கல்வித் திணைக்கள பிரதமகணக்காளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். சமர்ப்பிக்கப் பட்ட விலைக் கேள்விகள் கேள்வி நேரமுடிவில் விலைக் கேள்வியாளர்கள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும்.

**தலைவர்**
**மாகாணக் கல்விப் பணிப்பாளர்**
**மாகாணக் கல்வித்திணைக்களம்**
**திணைக்கள பெறுகைகள் குழு (பெரிது).**

(CR/45529) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
28 • 02 • 1963



மறைவு
14 • 07 • 2025

## வேலாயுதம்பிள்ளை சோதீஸ்வரன்

யாழ் கொடிகாமத்தை பிறப்பிடமாகவும், ஜேர்மனி Recklinghausen, பிரித்தானியா Harrow ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதபிள்ளை சோதீஸ்வரன் அவர்கள் கடந்த (14.07.2025) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார். அன்னார், காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை - செல்வதேவி தம்பதியினரின் அன்பு மகனும், அழகரட்ணம் - காலஞ்சென்ற பரமேஸ்வரி தம்பதியினரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கௌரிவாணி (பிரித்தானியா) அவர்களின் அன்பு கணவரும், சுபர்த்தினி (பிரித்தானியா), சுலோஜினி (பிரித்தானியா), சுவாந்தினி (பிரித்தானியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், அமிர்றாஜ் (மது) அவர்களின் அன்பு மாமனாரும், ஜெகதீஸ்வரன் (பிரித்தானியா), யோகேஸ்வரன் (பிரித்தானியா), செல்வேஸ்வரன் (பிரித்தானியா), சுகந்தினி (ஜேர்மனி), றமேஸ்வரன் (இலங்கை), சுபாசினி (இலங்கை), சுரேஸ்வரன் (இலங்கை) ஆகியோரின் அருமைச் சகோதரனும், வனஜா (பிரித்தானியா), விநோதினி (பிரித்தானியா), சுதனி (பிரித்தானியா), விக்கினறாஜா (ஜேர்மனி), கிருத்திகா (இலங்கை), பாலேஸ்வரன் (இலங்கை), வசந்தா (இலங்கை) ஆகியோரின் அன்பு மைத்துனரும், றங்கீலன், அஸ்வின், ஆரங்கன், அபினாஸ், அனஸ்கன், யஸ்மியா, றிசிகா, நிலக்ஸனா, அக்சனா, அக்சயா ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும், துளசிகா, மிதுனன், வைஷ்னவி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் சாறக் அவர்களின் பேரனும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (17.07.2025) வியாழக்கிழமை முற்பகல் 09.00 மணியளவில் பெரிய நாவலடியைச் சேர்ந்த றமேஸ்வரன் அவர்களது வீட்டில் இடம்பெற்று 11.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கொடிகாமம் வேவில் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாஹா மருத்துவ நிலையம்

திடீரென கை, கால் செயலிழப்பு, வாய் பேச முடியாது போதல், நீரிழிவு நோய் தரும் விறைப்பு, எரிவு, எலும்புதேய்மானம், மாறாத புண்கள், குழந்தையின்மை - சிறப்பு மருத்துவம் நோயாளி நடக்க மூச்சு வாங்குகிறதா - சக்தியூட்டும் மருந்தியல்

**தொடர்பு: 077 321 2740**

வங்கிமுன் லேன்
சாத்தாவத்தை வயிரவர் கோயிலடி
மானிப்பாய்


# அதிபருக்கு ஆதரவாக மாணவர்கள் பாடசாலை செல்லாது போராட்டம்!

யாழ்ப்பாணம், ஜூலை 17

ஏழாலை சைவ மகாஜன வித்தியாலய அதிபர் இடமாற்றப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பாடசாலை மாணவர்கள் அனைவரும் நேற்றுமுன்தினம் பாடசாலை செல்வதைப் புறக்கணித்துள்ளனர். மாணவர்கள் எவரும் வராததால் ஆசிரியர்கள் பாடசாலை நிறைவடையும் வரையில் காத்திருந்து வீடு திரும்பி யுள்ளனர்.

இடமாற்றப்பட்ட அதிபரை மீண்டும் பாடசாலைக்கு அதிபராக நியமிக்க வலியுறுத்தித் கடந்த திங்கட் கிழமை பாடசாலையின் பிரதான நுழைவாயிலை மூடி மாணவர்களும், பெற்றோரும், பழைய மாணவர்களும் போராட்டம் நடத்தியிருந்தனர். பாடசாலையில் கற்பித்த ஆசிரியை ஒருவரின் போலிக் குற்றச்சாட்டுக் கமையவே அதிபர் இடமாற்றப்பட்டுள்ளார் என்றும் அவர்கள் குற்றஞ்சாட்டியிருந்தனர்.

அதேவேளை, வடக்கு மாகாணக் கல்வி யமைச்சின் கணக்காய்வுப் பகுதியின் அதிகாரிகள் பாடசாலையின் கணக்கு விவரங்களை ஆய்வுசெய்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-66)



உடுப்பிட்டி தெற்கு பண்டகைப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.30 மணியள வில் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. (ச-66)

## பேராசிரியர் அழகையா துரைராசா அவர்களின் 31ம் ஆண்டு நினைவுதின வைபவம் - 2025

**காலம் : 21.07.2025 திங்கட்கிழமை**
**நேரம் : முற்பகல் 10.00 மணி**
**இடம் : யா/ உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி**
**பேராசிரியர் அ.துரைராசா நினைவு மண்டபம்**

**தலைவர்**
**திரு.நடராஜா அனந்தராஜ்**
(B.A Hons, M.A, Dip in Education, Dip in Journalism, SLPS, SLEAS, Former Principal, Uduppiddy, A.M.Colloge)

**நினைவுப்பேருரை வழங்குநர்**
**கலாநிதி.வைத்திலிங்கம் விஜயபாஸ்கர்**
(முதுநிலை விரிவுரையாளர். கல்வியியல்துறை. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

**நிகழ்ச்சி நிரல்**

1. மங்கல விளக்கேற்றல்
2. இறை வணக்கம்
3. பேராசிரியர் நிழற்படத்திற்கு மலர்மாலை அணிவித்தல்
4. தலைவர் உரை
5. அதிபர் உரை (யா/உடுப்பிட்டி அ.மி கல்லூரி
6. பேராசிரியர் அழகையா துரைராசா நினைவுப் பரிசில் வழங்கல்


2023. 2024ஆம் ஆண்டு A/L கணிதத்துறை மாவட்ட மட்டத்தில் முதலாமிடம் பெற்ற மாணவர்கள் செல்வன் மதியழகன் டினோஜன் (2023) (யா/மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்)
செல்வன்.கந்ததாசன் தசரத் (2024) (யா/ஹாட்லிக் கல்லூரி)
அவுஸ்திரேலியாவில் உள்ள பொறியியலாளர் திரு.பாலசிங்கம் மாணிக்கவாசகர் எமது கல்லூரியின் பழைய மாணவர் அவர்களின் நிதியத்தில் இருந்து வழங்கப்படுகின்றது 2023. 2024 ஆண்டு A/L கணிதத்துறை எமது கல்லூரி மட்டத்தில் முதலிடம் பெற்ற மாணவர்கள்
செல்வன்.தனரஞ்சன் தர்சயன் (2023)
செல்வன் யோகதாஸ் ஹரிகரன் (2224)
அவுஸ்திரேலியாவில் உள்ள பொறியியலாளர் திரு.மு.ஞானானந்தன் தமது கல்லூரி பழைய மாணவர் அவர்களின் நிதியத்தில் இருந்து வழங்கப் படுகின்றது

**நினைவுப்பேருரை**
கல்வியில் பட்டத்தகைமை வீக்கமடைதல் ஆசிரியர்உயர் கல்வியில் தற்திறன் உணர்வை வீழ்த்தும் ஒரு சத்தமின்றிய எதிர்வினைப் போக்கு

**நன்றியுரை**
**கல்லூரிக்கீதம்**

**பழையமாணவர் சங்கம்,**
**யா/உடுப்பிட்டி அ.மி கல்லூரி**

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த (21.06.2025) சனிக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

### ஐயம்பிள்ளை சிவசக்திவேல்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் எதிர்வரும் (20.07.2025) ஞாயிற்றுக்கிழமை காலை கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், வீட்டுக்கிருத்தியக் நிகழ்வுகள் எதிர்வரும் (22.07.2025) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெறும்.. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

**சித்தியம்புளியடி கிழக்கு,**
**தெல்லிப்பளை.**

**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்




### இராசநாயகம் யேசேப்பின் இராசாத்தியம்மா

"நான் நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன். என் ஓட்டத்தை முடித்து விட்டேன். விசுவாசத்தை காத்துக்கொண்டேன்." (2 தீமோத்தேயு 4:7)

சுன்னாகம், சூராவத்தையை பிறப்பிடமாகவும் சூராவத்தை, கனடா, அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட இராசநாயகம் யேசேப்பின் இராசாத்தியம்மா அவர்கள் கடந்த (13-07-2025) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி. அல்போன்ஸ்-பரிமளம் தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற இராசநாயகம் அவர்களின் அன்புமிகு மனைவியும், ராஜினி, Rev.Sr.யூலியற் மேரி (ரஞ்சினி) LSP, அன்ரன், யக்குலின், டிக்சன், இராசகுமார் ஆகியோரின் பாசமிகு தாயாரும், சாள்ஸ் மத்தியூஸ், பிரபா, சேகர், தர்மினி ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்றவர்களான ஜோசப் திருச்செல்வம், இராசநாயகம், மதுரநாயகம், ஞானப்பிரகாசம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், எட்மென் ராஜ், Rev. Fr. டெஸ்மென் ராஜ் CMF, நிக்ஸ்மென் ராஜ் (அச்சுவேலி), ஆன்லக்சினி, ஆன்யன்சினி, நிறோசன், நன்சி, ஜொனி, அக்சியா, அனிற்ரன், அஸ்வினி ஆகியோரின் பாசமிகு பேத்தியும், லேயோவின், அலெட் ஜலோசியா, லியோறியன் ஆகியோறின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (18-07-2025) வெள்ளிக்கிழமை சூராவத்தையில் அமைந்துள்ள அவரது இல்லத்திலிருந்து பிற்பகல் 02:30 மணிக்கு எடுத்து செல்லப்பட்டு சூராவத்தை புனித திரேசம்மாள் ஆலயத்தில் நல்லடக்கத்திருப்பலி ஒப்புகொடுக்கப்பட்டு ஏழாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**சாள்ஸ் மத்தியூஸ்**
**சரஸ்வதி சனசமூக நிலையம்,**
**சூராவத்தை, சுன்னாகம்.**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்**
**0777041368 (ராஜினி-அச்சுவேலி)**
**0014164528704 (அன்ரன்-கனடா)**

## மரண அறிவித்தல்




### சின்னையா நாகையா (நடராசா)

சுதுமலை எச்சாட்டியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சின்னையா நாகையா அவர்கள் (14.07.2025) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான முத்துத்தம்பி - மனோன்மணி தம்பதியினரின் அன்பு மருமகனும், தங்கரத்தினம் அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற புவனேஸ்வரன் மற்றும் தயாநிதி, கலாநிதி (லண்டன்), கமலாம்பிகை ( லண்டன்), காலஞ்சென்ற இராதை, ஜீவநாதன் மற்றும் ஜெயக்குமார் (பிரான்ஸ்), கண்ணண் (பிரான்ஸ்), கோமதி (கொலணட்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை, முத்து, இரத்தின்ம், புவனேஸ்வரி மற்றும் தில்லையமா ஆகியோரின் சகோதரனும், இராசேந்திரம் (சண்முகம் - ஜங்கரன் பந்தல் இணுவில்) ஆகியோரின் மைத்துனரும், விமலராணி, நேசரத்தினம், விஜயபாலன் (லண்டன்), ஜெகதீஸ்வரன் (லண்டன்), துஷானி (பிரான்ஸ்), சிவாகரன் (கொலணட்), ஜிந்து (பிரான்ஸ்), அக்ஷயன், யதுர்ஷிகா, சுகுணண், கோபிநாத், சாம்பவி, யாதவி, தனுசன், கார்த்திகா, ஜனனி, சகானா, பவித்திரன், அக்சரா, அக்ஷரன், காயத்திரி, சந்தோஷ் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (18.07.2025) நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 11:00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் :**
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திண்மக்...

யாழ்ப்பாணம் மாநகரசபையின் ஜூலை மாதத்துக்கான அமர்வு முதல்வர் மதிவதனி தலைமையில் நேற்று ஆரம்பமானது. சபையின் கழிவகற்றல் திட்டம் தொடர்பில் விவாதித்தபோதே, 'யாழ்ப்பாணம் மாநகர கழிவகற்றல் திட்டத்தில் பல வடிவங்களில் ஊழல் மோசடிகள் தொடர்கின்றன' என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதன்படி, யாழ்ப்பாணம் மாநகரசபையில் 16 உழவியந்திரங்கள் வாடகை அடிப்படையில் கழிவகற்றும் செயற்பாட்டில் ஈடுபடுகின்றன. அவற்றுக்கான மாதாந்த வாடகையாக 50 இலட்சம் ரூபாவும், வருடாந்த வாடகையாக 6 கோடி ரூபாவும் வழங்கப்படுவதாகக் கூறப்பட்டது. மாநகரசபைக்குச் சொந்தமான வாகனங்கள் சிறிய பழுதுகளுடனேயே இயங்காமல் உள்ளன. எனவே, அந்தப் பழுதைச் சரிசெய்வதை விடுத்து, அதைவிடப் பலமடங்கு தொகையை வாடகைக்காகச் செலவிடுவது யாழ்ப்பாணம் மாநகரசபையின் பணத்தை தேவையற்றுச் செலவழிக்கும் செயற்பாடாக அமைவதுடன், இதில் ஊழல் மோசடிகள் உள்ளதாகவும் சந்தேகப்படுகின்றோம் என்று உறுப்பினர் ப.தர்சானந் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், மாநகரசபைக்குச் சொந்தமான சில கழிவகற்றல் வாகனங்கள் குறுகிய இடங்களில் சேவையில் ஈடுபடுகின்ற நிலையில், தொலைதூரச் சேவைக்காக வாடகை வாகனங்கள் செல்கின்றன. இதற்கான காரணங்கள் மோசடிகளுடன் தொடர்புடையதாக இருக்கலாம் என்று உறுப்பினர் சுவீகரன் நிஷாந்தன் சுட்டிக்காட்டினார்.

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குச் சொந்தமான வாகனங்கள் சில இயங்கு நிலையில் உள்ளபோதிலும், அவை உயர் அதிகாரிகள் சிலரின் அழுத்தத்தால் இயங்காமல் செய்யப்பட்டுள்ளன. இந்த விடயம் பாரதூரமானது என்றும் உறுப்பினர்களால் சுட்டிக்காட்டப்பட்டது.

வருடாந்தம் 6 கோடி ரூபாவை வாடகைக்குச் செலவிடுவதைவிட, புதிய வாகனங்களைத் தீர்வையற்ற வரியின் கீழ் கொள்வனவு செய்யமுடியும் என்றும், யாழ்ப்பாணம் மாநகரசபையின் வாகனங்களை கூடுதலான வினைத்திறனுடன் இயங்கவைக்கமுடியும் என்றும் உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினார்கள். இந்த விடயத்தில் இதுவரை இடம்பெற்ற பெரும் ஊழல் மோசடிகள் தொடர்பான தகவல்கள் தம்மிடம் உள்ளன. இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று யாழ்ப்பாணம் மாநகரசபை உறுப்பினர் கபிலன் சுட்டிக்காட்டினார். (அ-ம-26)

## மிகமுக்கியமான...

கப்படாத விடயங்கள் தொடர்பிலும் நீண்ட விவாதங்கள் இடம்பெற்றன. இதனால், அமர்வு இரவு 7 மணிவரை தொடர்ந்தது. இதனால், அமர்வு நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது பல உறுப்பினர்கள் வெளியேறிச் சென்றனர்.

முக்கியமான விவாதங்கள் மற்றும் கலந்துரையாடல்கள் இடம்பெற்றபோது பெருமளவான உறுப்பினர்கள் வெளியேறியிருந்தனர். 45 உறுப்பினர்களைக் கொண்ட மாநகரசபையில், அமர்வு முடியும்போது வெறும் 25 உறுப்பினர்களே இருந்தனர்.

நேற்றைய அமர்வின்போது, மராமத்துக் குழு, சுகாதாரக்குழு, நிதிக்குழு ஆகியவற்றில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் சபையின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டன. மாநகரசபை அமர்வுகளுக்கு தேவை யான பணியாளர்களை நியமிப்பது தொடர்பிலும், வட்டாரங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்வது தொடர்பிலும், நல்லூர் உற்சவகாலத்தில் அமைக்கப்படும் வீதித் தடைகள் தொடர்பிலும் நீண்டநேர விவாதங்கள் இடம்பெற்றன. (அ-ம-26)

## 'பேஸ்புக்கில்'...

கப்பட்டது. மாநகரசபையின் நேற்றைய அமர்வில், உறுப்பினர்களிடையே விவாதம் நடைபெற்ற நிலையில் சபை அமர்வில் பங்கேற்ற மாநகரசபை உறுப்பினர் ஒருவர் தனது பேஸ்புக்கில் அமர்வை நேரலையில் ஒளிபரப்புச் செய்தார். இந்த விடயம் தொடர்பில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் மாநகர சபை உறுப்பினர் ப.தர்சானந் குறித்த விடயம் தொடர்பில் மாநகர முதல்வரின் கவனத்துக்குக் கொண்டு சென்றார்.

சபை ஒழுங்கு விதிகளுக்கு மாறாக குறித்த உறுப்பினர் செயற்பட்டதால், அவருக்கு ஒரு மாதம் சபை அமர்வில் பங்கேற்க தடை விதிப்பது சம்பந்தமாக முதல்வர் சபை உறுப்பினர்களின் ஆலோசனையை கேட்டார்.

இதன்போது எழுந்த, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி உறுப்பினர் இளங்கோவன் குறித்த நபர் புதிய உறுப்பினர் என்பதால் மன்னிப்பு வழங்குமாறு கோரினார். இதனையடுத்து, மாநகர முதல்வர் அந்த உறுப்பினரைக் கடுமையாக எச்சரித்ததுடன், இனி இவ்வாறு செயற்பட்டால் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவுறுத்தினார். (அ-ம-26)

## அரசியற்...

வில் போராட்டம் இடம்பெறவுள்ளது. கறுப்பு ஜூலைக் கலவரங்கள் இடம்பெற்று 42 ஆண்டுகள் நிறைவை முன்னிட்டே இந்தப் போராட்டம் இடம்பெறவுள்ளது.

இது தொடர்பில் குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் மு.கோமகன் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

இதுவரை காலமும் இலங்கையின் கொடூர சிறைக்கூடங்களுக்குள் நயவஞ்சகமாக படுகொலை செய்யப்பட்ட தமிழ் அரசியற் கைதிகளுக்கான நீதியைக் கோரும் நினைவேந்தலும், 30 ஆண்டுகள் கடந்தும் விடுதலையின்றி சிறைகளுக்குள் வாடும் தமிழ் அரசியற் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தும் போராட்டமும் பொதுமக்களின் ஒத்துழைப்புடன் முன்னெடுக்கப்படவுள்ளது. இவ்வாறான போராட்டங்களைத் தொடர்ச்சியாக மேற்கொள்ளும் பட்சத்திலேயே, சமூகத்தின் பெயரில் சிறைவாடும் எமது உறவுகளான தமிழ் அரசியற் கைதிகளுக்கு நீதியும் விடுதலையும் கிடைக்கப்பெறும் எனும் நிலைமை ஏற்பட்டுள்ளது. எனவே, ஜூலை 24, 25ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ள இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்தில், இன, மத, மொழி கடந்து, வயது பால் வேறுபாடின்றி, கட்சி பேதங்களுக்கு அப்பால் ஒன்றிணைவோம் - என்றுள்ளது. (அ-ம-26-20-66)

## நடந்து...

தாவது:-

2009ஆம் ஆண்டின் பின்னர் தாயகத்திலும் உலகப் பரப்பிலும் உள்ள தமிழ் பேசும் மக்களின் மனதில் எழுந்து நிற்கின்ற வினா, எமது தேசியத் தலைவரின் இருப்புத் தொடர்பானது. பொதுவாகத் தாயகத்தில், குறிப்பாக முள்ளிவாய்க்கால் வரை பயணித்த மக்கள் மனநிலைமையைச் சரியாகவே புரிந்துகொண்டவர்கள் என்ற வகையில் இனி எக்காலத்திலும் எங்கும் எம் கண்ணில் அவர் தோன்றமாட்டார் என்ற கசப்பான உண்மையைப் புரிந்துகொண்டனர். கடந்த காலங்களில் எடுக்கப்பட்ட வீடியோக்களை மட்டுமே பார்த்து இவ்வாறான உயரிய தலைவனின் காலத்தில் வாழ்ந்தோம் பங்களித்தோம் என்ற உணர்வினைப் பெற்றனர்.

தாயகத்தில் தலைவரின் புதல்வி துவாரகாவின் வித்துடலுக்கு மண்தூவி வீர வணக்கம் செய்தவர்கள் இன்னமும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அப்படியிருக்கையில் துவாரகாவின் பெயராலும் மோசடி செய்யும் ஈனப்பிறவிகள் உலகில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எமது புனிதமான விடுதலை இயக்கத்தின் தலைவரை தமிழினம் இழந்துவிட்டது என்ற செய்தியை அனைத்துலகப் பொறுப்பாளரென ஏற்கனவே தலைவர் உத்தியோகபூர்வமாக நியமித்த கே.பி. மற்றும் அம்பாறை மாவட்டச் சிறப்புத் தளபதி ராம், பிராந்திய அரசியற் துறைப் பொறுப்பாளர் தயாமோகன் ஆகியோர் உலகுக்குத் தெரியப்படுத்தினர். அந்த நாள் 2009ஆம் ஆண்டு மே மாதம் 17ஆம் திகதியென்று அவர்கள் குறிப்பிட்டிருந்தனர். இந்த உண்மையை ஏற்றுக்கொள்ளும் திராணி எப்போதும் போராட்டத்துக்கும் தேசியத்தலைவருக்கும் விசுவாசமாக இருப்போம் என சத்தியப்பிரமாணம் எடுத்துக்கொண்ட அனைவருக்கும் இருக்கவேண்டும்.

உத்தியோகபூர்வமாகத் தலைவரால் நியமிக்கப்பட்ட இந்த மூவரும் விடுத்த அறிவித்தலை இனி எவரும் உதாசீனம் செய்ய முனைய மாட்டார்கள் என நான் நம்புகிறேன். ஏற்கனவே நடந்து முடிந்ததே வரலாறு. இதில் தணிக்கைக்கோ சமரசத்துக்கோ இடமில்லை. பெரும்பான்மையினரின் முடிவு என்று தீர்மானிப்பதற்கு இது தேர்தல் அரசியலல்ல. நாம் எடுக்கும் முடிவுகள் இவ்வளவு காலமும் வாழ்ந்த வாழ்க்கையின் அர்த்தத்தைப் பிரதிபலிக்கவேண்டும். வேறு எந்த சக்திகளின் முடிவுகளையும் அமுலாக்கும் விதமாக வரலாற்றை மாற்றியமைக்க முயலக்கூடாது என் எமது மாவீரர் குடும்பங்களின் சார்பில் வேண்டிக்கொள்கிறேன் - என்றுள்ளது. (அ-ம-இ)

## கல்லுண்டாய்...

என்று தேசிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாணம் மாநகர உறுப்பினர் கபிலன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் நேற்றைய அமர்வில், மாநகரின் கழிவகற்றல் முகாமை செய்யப்பட வேண்டிய அவசியம் தொடர்பில் நீண்டநேரம் விவாதிக்கப்பட்டது.

இதன்போது மாநகர உறுப்பினர் கபிலன் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணம் கல்லுண்டாய் வெளியின் குப்பைமேடு அண்மையில் தீப்பற்றி எரிந்தது. இதையடுத்து, சம்பவ இடத்துக்குச் சென்று அங்கு ஆய்வில் ஈடுபட்டபோது, அந்தக் குப்பைமேட்டில் மருத்துவக் கழிவுகள் கொட்டப்பட்டுள்ளமையை அவதானிக்க முடிந்தது. வலிப்பு மற்றும் வலி நிவாரணிகள் உள்ளிட்ட ஏராளம் மருத்துவக் கழிவுகளே இவ்வாறு கொட்டப்பட்டுள்ளன. மருத்துவக் கழிவுகளை நாங்கள் தான்தோன்றித் தனமாக அகற்ற முடியாது. எனவே, குப்பைமேடு தானாகத் தீப்பற்றியதா அல்லது தீப்பற்ற வைக்கப்பட்டதா? என்பதில் சந்தேகம் நிலவுகின்றது. தானாகத்தான் தீப்பற்றியது என்றாலும், இது ஆபத்தான விடயம்தான். இதன் பின்னாலுள்ள ஆபத்தைப் புரிந்துகொள்ளுங்கள். அந்தப் பகுதியில் வாழும் மக்களுக்குப் பெரும் சுவாசப் பிரச்சினைகள் ஏற்படும்.

யாழ்ப்பாணம் நகரப்பகுதிக்குள் உள்ள சில தனியார் மருத்துவமனைகளின் கழிவுகளும் அங்கு அகற்றப்படுகின்றன. இதற்கெல்லாம் போதிய ஆதாரங்கள் எம்மிடம் உள்ளன. இது தொடர்பில் எதிர்வரும் அமர்வுகளில் தனிப் பிரேரணையாக முன்வைப்பேன். காலாகாலமாக இடம்பெற்றுவரும் இந்தப் பிரச்சினைக்கு நாங்கள் ஒரு காத்திரமான தீர்வை முன்வைக்க வேண்டும். இல்லையேல் இந்த 45 பேரும் இங்கிருப்பதால் பயனில்லை.

அத்துடன், குப்பைகள் தரம்பிரிக்கப்படாமல் கொட்டப்பட்டு வருகின்றன. தரம்பிரிக்கும் பணி யாழ்ப்பாணம் மாநகரசபையிடமும், அதைக் காவுகை செய்யும் பணி தனியாரிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது. குப்பைகளைக் காவுவதற்கு எங்களுக்கு ஆட்கள் தேவையில்லை. தரம் பிரிப்பதற்குத்தான் தேவை. எனவே, இந்த முறைமையை மாற்றி தரம் பிரிக்கும் பணியை தனியாரிடம் ஒப்படைக்க வேண்டும். காவுகையை நாங்கள் மேற்கொள்ளலாம். இந்த விடயத்தில் விரைவான நடவடிக்கையொன்றை இந்த சபையிடம் மக்கள் எதிர்பார்க்கின்றனர். நாங்கள் நல்ல முயற்சிகளை மேற்கொள்ளும்போது, அதற்கு உதவ மத்திய அரசாங்கமும் தயாராக உள்ளது - என்றார். (அ-ம-26)

## வலுவான...

மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை ஜனாதிபதி உரிய வகையில் நிறைவேற்றி வருகின்றார். அனைத்து உறுதிமொழிகளையும் 24 மணிநேரத்துக்குள் நிறைவேற்றிவிட முடியாது. கட்டம், கட்டமாக அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும். இது தொடர்பான புரிந்துணர்வு மக்களுக்கு உள்ளது.

அரசாங்கத்தின் பயணம் மிகச் சிறப்பாகவே சென்றுகொண்டிருக்கின்றது. ஆனால், எதிரணிகள்தான் வங்குரோத்து அடைந்துள்ளன. இன்று பலமான எதிரணியென்ற ஒன்றில்லை. அதனால்தான், அரசாங்கத்துக்கு எதிராகப் போலிப் பரப்புரைகளை மேற்கொள்ளவேண்டிய நிலைக்கு அவை தள்ளப்பட்டுள்ளன.

மக்களின் பணத்தைக் கொள்ளையிட்டவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களை பிடிக்கும் நடவடிக்கை விரைவில் மேற்கொள்ளப்படும் - என்றார். (அ-ம-44)

## மூக்கை...

வழங்க வேண்டிய விடயங்களில் துணை முதல்வர் அடிக்கடி தலையீடு செய்து கொண்டிருந்ததால் நீண்டநேரம் இழுபறி ஏற்பட்டது.

விவாதங்களின் போது உறுப்பினர்கள் முதல்வரிடம் குறிப்பிடும் விடயங்களுக்கும், முதல்வர் தெரிவிக்கவேண்டிய பதில்கள் ஒவ்வொன்றுக்கும் பதில் முதல்வர் தேவையற்றவகையில் தலையிட்டுக் கருத்துகளை வெளியிட்டபடி கொண்டிருந்தார்.

ஒவ்வொரு விடயத்திலும் தலையிட்டு நீண்ட விளக்கத்தையும் அவர் வழங்கினார். காலை 10 மணிக்கு ஆரம்பித்த அமர்வு இரவு 7 மணிவரை இடம்பெற்றமைக்கு இதுவும் ஒரு காரணமாக அமைந்தது. (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# டிஜிற்றல் அடையாள அட்டை வீண் அச்சம் தேவையில்லை

*அமைச்சர் நளிந்த தெரிவிப்பு*

**கொழும்பு, ஜூலை 17**

**டிஜிற்றல் தேசிய அடையாள அட்டை செயற்றிட்டத்தின் ஊடாக நாட்டு மக்களின் தனிப்பட்ட தரவுகள் இந்தியாவுக்கு வழங்கப்படும் என்பது பொய்யானது. சுவசெரிய அம்புலன்ஸ் சேவை நடைமுறைப்படுத்தப்பட்டபோதும் இவ்வாறுதான் குறிப்பிட்டார்கள். குற்றச்சாட்டுகளை முன்வைப்பவர்கள் நீதிமன்றத்தை நாடலாம்.**

இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரும்,அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் நடந்த வாராந்தச் செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் விமல் வீரவன்ஸவுக்கு தனது பெயர், பிறந்த திகதி உள்ளிட்ட விவரங்கள் எங்கேனும் செல்லும் என்ற பயம் உள்ளது. இந்த விடயத்தில் எவரும் அச்சமடையத் தேவையில்லை. அதற்கான பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது. நாட்டு மக்களின் தனிப்பட்ட தரவுகள் ஆள்களைப் பதிவு செய்யும் திணைக்களத்திடம் உள்ளது. இந்தத் திணைக்களம் இந்தியாவுக்குரியதல்ல, இலங்கைக்குச் சொந்தமானது. டிஜிற்றல் தேசிய அடையாள அட்டை செயற்றிட்டத்துக்கு இந்திய அரசாங்கம் முழுமையாக ஒத்துழைப்பளிக்கிறது. செயற்றிட்டத்துக்கான செலவுகளில் 50 சதவீதம் இந்தியா நன்கொடையாக வழங்குகிறது. அதில் பங்கேற்கும் இந்திய நிறுவனம் விலைமனுக்கோரல் ஊடாகவே தெரிவு செய்யப்படும். இந்தச் செயற்றிட்டத்துக்கான பொறுப்பை இலங்கை அரசாங்கம்ஏற்றுக்கொண்டுள்ளது. ஆகவே தனிப்பட்ட தரவு தொடர்பில் எவரும் அச்சமடையத் தேவையில்லை. விலைமனுக்கோரல் விவகாரத்தில் இந்தியா எவ்வித அழுத்தமும் பிரயோகிக்க வில்லை. இந்தியாவின் தொழில்நுட்ப சேவை இயலுமை தொடர்பில் அந்த நாட்டுடன் பேச்சில் ஈடுபட்டோம். இதன் பின்னரே இந்த செயற்றிட்டத்தை மீள ஆரம்பித்துள்ளோம்-என்றார். (எ-இ)

# வரியைக் குறைக்காவிட்டால் ஆடை ஏற்றுமதிக்கு ஆபத்து

*உற்பத்தியாளர்கள் சுட்டிக்காட்டு*

கொழும்பு, ஜூலை 17

அமெரிக்கா இலங்கைமீது விதித்துள்ள 30 வீத வரியைக் குறைப்பதற்கு இலங்கை நடவடிக்கை எடுக்காவிட்டால், அமெரிக்க ஆடை வாங்குபவர்கள் குறைந்த வரிச் சலுகைகள் கொண்ட பிற நாடுகளை நோக்கித் திரும்பும் அபாயம் உள்ளது என்று ஆடை உற்பத்தித்துறை சார்ந்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக அவர்கள் தெரிவித்துள்ளதாவது:-

கடந்த ஆண்டு இலங்கையின் ஆடை ஏற்றுமதி வருவாய் 4.7 பில்லியன் அமெரிக்க டொலராக இருந்தது. அதில் 40.04 வீதம் அல்லது 1.9 பில்லியன் அமெரிக்க டொலர் அமெரிக்காவுக்கான ஏற்றுமதிகள் மூலம் ஈட்டப்பட்டுள்ளது. இந்த ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில், ஆடை ஏற்றுமதி வருவாய் இரண்டு பில்லியன் அமெரிக்க டொலராக இருந்தது. அதில் 746.53 மில்லியன் அமெரிக்க டொலர் அமெரிக்கச் சந்தைக்கான ஏற்றுமதிகள் மூலம் ஈட்டப்பட்டுள்ளது.

இந்தியாவுக்கும், அமெரிக்காவுக்கும் இடையில் வரவிருக்கும் வர்த்தக ஒப்பந்தம் காரணமாக இந்தியாவுக்கு 20 வீதத்துக்கும் குறைவான வரி விதிக்கப்படலாம் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. அதனால் இலங்கையின் ஆடைத் தொழிலுக்கு மிகப்பெரிய அச்சுறுத்தல் இந்தியாவில் இருந்து வரக்கூடும். இலங்கை மீது விதிக்கப்பட்ட 30 வீத வரியைக் குறைக்க அனைத்து முயற்சிகளும் எடுக்கப்படவேண்டும். இல்லாவிட்டால் ஆடைத் தொழில் ஆபத்தில் சிக்கக்கூடும்-என்றனர்.

(எ-இ)

# சைபர் பாதுகாப்பை வலுப்படுத்தத் திட்டம்

டிஜிற்றல் பொருளாதார அமைச்சர் என்ற முறையில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவால் முன்வைக்கப்பட்ட இலங்கையின் தேசிய சைபர் பாதுகாப்புத் திட்டம் - 2025-2029 ஐ செயற்படுத்த அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

உலக வங்கியின் ஆதரவுடன் இலங்கைக் கணினி அவசரத் தயார்நிலை குழு உருவாக்கிய இந்தத் திட்டம், 2018 இல் அறிமுகப்படுத்தப்பட்ட 2019 மற்றும் 2023க்கு இடையில் செயற்படுத்தப்பட்ட நாட்டின் முதல் சைபர் பாதுகாப்பை அடிப்படையாகக்கொண்டது. சட்டம் மற்றும் ஒழுங்குமுறைக் கட்டமைப்பை மேம்படுத்துதல், சைபர் பாதுகாப்பு விழிப்புணர்வை மேம்படுத்துதல், தயார்நிலையை மேம்படுத்துதல், உள்ளிட்ட கருப்பொருள்களை இந்தத் திட்டம் மையப்படுத்தியுள்ளது. (ச-இ)


A/L - 2027
கலை, வர்த்தகம்
புதிய பிரிவு
19.07.2025
சனி காலை 9 மணி
DMI Jaffna
077 8480 604

தென்னந் தோட்டக்காணி விற்பனைக்கு
பச்சிலைப்பள்ளி பளைப் பிரதேசத்தில் 40 ஏக்கர் வளமான தென்னைக்கு உகந்த காணி விற்பனைக்கு உண்டு.10 ஏக்கராகவும் பெற்றுக் கொள்ளலாம். 1 ஏக்கர் 15 இலட்சம்.
(CS/58593) J-1
தொடர்பு:- Whatsapp:- 0044 740 537 3526

ஒன்லைன் பயிற்சி வகுப்புகள்
பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர்களால் தரம் 6 முதல் தரம் 11 வரையான மாணவர்களுக்கு ஒன்லைன் ஊடாக விஞ்ஞானம், கணிதம், தகவல் தொழில்நுட்பம் (ICT) முதலான பாடங்கள் கற்றுக் கொடுக்கப்படும். மேலும் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு பயிற்சி வினாக்கள் தயார்படுத்தப்பட்டு பயிற்சி அளிக்கப்படும்.
(CS/58865) J-1
தொடர்புகளுக்கு:- ஆசிரியர் - நவரட்ணம் 076 600 9432
சுதா :- 076 916 3479

## மரண அறிவித்தல்

மண்ணில் 26 . 03 . 1947



விண்ணில் 14 . 07 . 2025

### திரு. சின்னத்தம்பி அருள்ராசலிங்கம்

**(ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர் மாவட்ட வைத்தியசாலை தெல்லிப்பழை)**

கும்பிளான் தெற்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திரு. சின்னத்தம்பி அருள்ராசலிங்கம் அவர்கள் கடந்த (14.07.2025) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - பறுவதம் தம்பதியரின் புதல்வனும், காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் - பாரததேவி தம்பதியரின் அன்பு மருமகனும், ரேவதிதேவி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சொர்ணம்மா, சொக்கலிங்கம், பத்மாவதியம்மா ஆகியோரின் சகோதரரும், ஞானலிங்கம் (டென்மார்க்) இன் தம்பியுமாவார். இராசையா, அன்னலட்சுமி, மணி, சிங்கராசா, றூபன், ஜமுனா (டென்மார்க்), ஆகியோரின் மைத்துனரும், தங்கராசா, வர்ணமலர், திருமலர் (ராணி), சிவா, குமுதினி, வரதராசா, சுகிர்தராசா, விநோதினி, நிர்மலாதேவி (நிமலி), காஞ்சனா, மயூரன், தரன், சர்மிளா, றூபி, ரேகா, அகிலன், கோபி, சுரேக்கா ஆகியோரின் அன்பு மாமனாரும், கருணாகரன், சசிகலா, சுரேஸ்கரன், வித்தியாகரன், லோகிதகலா, அமிர்தகலா, ஸ்ரீகலா, தனேஸ்கரன், மதியழகன், மதியூரன் ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.07.2025) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கும்பிளான் தெற்கு காடாகடம்பை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

கும்பிளான் தெற்கு,
கும்பிளான்.

தகவல் : குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி: news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில்17.07. 2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.